வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 30.10.2023 திங்கட்கிழமை | இதழ் : 325 | பக்கங்கள் : 16




# கொழும்பு வந்த சீன கப்பலால் பெரும் இராஜதந்திர சிக்கல்!

## புதிய அரசியல் நெருக்கடி என இந்திய ஊடகங்கள் விமர்சனம்



கொழும்பு, ஒக்ரோபர் 30

**சீனாவின் ஷி யான் 6 ஆய்வுக் கப்பல் நேற்றுமுன் தினம் புறப்படும் என அறிவித்திருந்த நிலையில் மேலும் இரண்டு நாட்களுக்கு இலங்கையில் கடல் சார் ஆராய்ச்சியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**ஷி யான் 6 ஆய்வுக் கப்பலை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இலங்கைக் கடலுக்குள் நுழைந்த சீன ஆய்வுக் கப்பலான ஷி யானன் 6ஐ அடிப்படையாகக் கொண்டு, சீன மற்றும் இந்தியத் தரப்புகளுக்கு ஆதரவான ஊடகங்கள் விமர்சனம் செய்துள்ளன.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள இந்த கப்பல் தொடர்பில் இந்திய ஊடகங்கள் அண்மைய நாட்களில் வெளியிட்ட விமர்சன அறிக்கைகளுக்கு சீன ஊடகங்களும் பதிலளித்துள்ளன.

சீனாவின் புவி இயற்பியல் செயல்பாடுகளை இந்திய ஊடகங்கள் அரசியலாக்குவதை சீனாவின் அரசு ஊடகமான குளோபல் ரைம்ஸ் கண்டித்துள்ளது.

சீன கப்பலின் வருகை தொடர்பில் இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் இந்தியாவின் பிராந்திய மூலோபாயத்திற்கு உதவும் வகையில் மட்டுமே ஒருதலைபட்சமான அறிக்கைகள் என்று சீன ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஷின் ஜூவா பல்கலைக்கழகத்தின் தேசிய மூலோபாய நிறுவனத்தின் ஆராய்ச்சித் துறையின் நிறுவனப் பணிப்பாளர் **11**

## தலையில் விறைப்பு ஏற்பட்டு மயங்கிய சிறுமி உயிரிழப்பு!

### யாழ். குருநகரில் பெரும் சோகம்

யாழ்ப்பாணம், ஒக். 30

தலையில் விறைப்பு ஏற்பட்டு மயங்கி சரிந்த சிறுமி ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

தண்ணீர் தாங்கி வீதி, குருநகரை சேர்ந்த ஜேசுதாஸ் அனோஜினி (வயது-10) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரியில் 5ஆம் ஆண்டில் கல்வி கற்று வரும் குறித்த சிறுமி **11**

## வயிற்றுக்குத்தால் பாதிக்கப்பட்ட இளம் தாய் ஒருவர் உயிரிழந்தார்!

### கிளிநொச்சியில் துயரச் சம்பவம்

கிளிநொச்சி, ஒக். 30

வயிற்றுக் குற்றினால் பாதிக்கப்பட்ட இளம் தாய் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

தர்மபுரம், கிளிநொச்சியை சேர்ந்த இரண்டரை வயதுக் குழந்தையின் தாயான இந்துஜன் பானுசா (வயது-20) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். **11**

## அரச நிறுவனங்களுக்கு இடையிலான மோதல்களினால் அபிவிருத்தி தாமதம்

### பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 30

சீன அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக எழுமடுவ மற்றும் மஸ்மடுவ காணிகளின் உரிமை தொடர்பில் கொழும்பு மாநகர சபைக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையிலான இழுபறியை உடனடியாக நிறுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இரு தரப்பு அதிகாரிகளிடமும் பணிப்புரை விடுத்தார்.

இவ்விடயம் தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடி புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வர வேண்டுமென அமைச்சர் அங்கு வலியுறுத்தினார்.

அப்போது இரு நிறுவனங்களும் தங்கள் மீது நம்பிக்கை வைக்கும் என்றும் **11**

## பட்ஜெட்டை பெரமுன தோற்கடித்தால் பாராளுமன்றத்தை கலைத்துத் தேர்தல்

### அரச உயர்மட்டம் அவதானம்

கொழும்பு, ஒக். 30

வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிக்கும் வகையில் பொதுஜன பெரமுன கட்சி செயற்பட்டால் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்வது தொடர்பில் அரச உயர்மட்டம் அவதானம் செலுத்தி வருகின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது பட்ஜெட்டை ஆதரித்துவிட்டு, குழுநிலை விவாதத்தின்போது (அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள்) சில அமைச்சுகளுக்கான **11**



## அரசுக்கு எதிராக நேற்று சங்கானையில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நேற்று மாலை சங்கானை பஸ் நிலையத்திற்கு முன்பாக தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டமானது ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் தீவக தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம் தலைமையில் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் தீப்பந் தங்களை ஏந்தியவாறு குறைத்திடு குறைத்திடு மின்சார கட்டணத்தை குறைத்திடு, **11**

## ஆனைக்கோட்டையில் இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், ஒக். 30

மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த உதயகுமார் உசாந்தன் (வயது 24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் கரம் சுண்டல் விற்பனை செய்யும் வண்டில் ஒன்றினை தயாரித்து, அதற்கு மின்சார வேலைகள் செய்துவிட்டு, மின்சாரம் **11**

## மன்னார் தீவை அழிக்கும் நில விற்பனை நடக்கிறது

### பிரஜைகள் குழு குற்றச்சாட்டு

மன்னார், ஒக். 30

மன்னார் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அவுஸ்திரேலிய சுரங்க நிறுவனம் ஒன்று, அதன் உள்ளூர் பங்காளிகள் மூலம், மன்னார் தீவின் கரையோரப் பகுதியில் - பொய்யான சாக்குப் போக்குகளின் கீழ் நிலத்தை வாங்குகிறது என மன்னார் பிரஜைகள்குழு **11**



## யாழில் கடலுக்குள் பாய்ந்த ஓட்டோ!

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வேகமாக பயணித்த ஓட்டோ ஒன்ற வீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்தது.

நேற்று மதியம் ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்தது.

ஓட்டோவின் சாரதி உட்பட ஐவர் பயணித்த நிலையில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். **11**

# இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவர் கனடாவிலிருந்து வட்ஸ்அப்பில் ஒரு தகவல் அனுப்பியிருந்தார். அது ஒரு குட்டிக்கதை. அந்தக் கதைக்கு பின்னர் அவர் அனுப்பியிருந்த சிறிய குறிப்பு இது.

'சம்பந்தன் ஐயாவை அரசியலில் இருந்து ஒய்வுபெற வேண்டும் என்று அவரால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட சுமந்திரன் கோரிக்கை விடுத்ததைப்பற்றி எழுதியிருந்தீர்கள். ஆனால் இது தொடர்பாக சங்கரி ஐயா தெரிவித்த கருத்தை இன்றைய ஈழநாடுவில் படித்தபோது இந்தக் கதையை உங்களுக்கு அனுப்பவேண்டும் என்று தோன்றியது.'

இனி கதைக்கு வருவோம்.

ஒரு மரம்வெட்டி மரத்தின் கிளைமீது அமர்ந்து கொண்டு அந்தக் கிளையையே வெட்டினானாம்.

உமாதேவியார் பார்த்து விட்டு, இவன் என்ன முட்டாளாக இருக்கிறானே, கீழே விழுந்து சாக அல்லவா போகிறான் என்று சிவபெருமானிடம் சொன்னாராம். அதற்கு அவர் சொன்னாராம், சரி அவன் உதவிக்கு உன்னைக் கூப்பிட்டால் நீ போய் காப்பாற்று, என்னைக் கூப்பிட்டால் நான் காப்பாற்றுகிறேன் என்றாராம்.

இருவரும் மிகவும் கவனமாக அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்களாம்.

அவன் இருந்த கிளை இறுதியாக முறிந்து விழுந்தது. அவன் 'ஐயோ' என்று கதறிக்கொண்டே கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் செத்துப் போனான்.

உமாதேவியார் என்ன இறந்து போனானே என்றாராம். அதற்கு சிவன் சொன்னாராம், அவன் எமனின் மனைவி 'ஐயோ' வை அல்லவா கூப்பிட்டான். அது தான், ஐயோ வந்து அவன் உயிரை எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்றாராம்.

இந்தக் கதைக்கும் சங்கரி ஐயாவின் கருத்துக்கும் எந்த தொடர்பும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதனால் அவரின் அந்தச் செய்தியை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன்.

'அமரர்களான தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரால் தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிதைத்து 2004ஆம் ஆண்டு கூட்டணியில் வளர்க்கப்பட்ட சம்பந்தன் வளர்த்த கடாவாக மட்டுமல்ல ஒநாயாகவும் மாறி வரலாற்றுத் துரோகம் செய்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குச் செய்த துரோகம் தற்போது சம்பந்தனுக்குத் திரும்பி விட்டது.

ஆகையால் சம்பந்தன் மட்டுமல்ல 2004ஆம் ஆண்டு துரோகத்தனத்தால் தமிழர்களின் வாக்குகளைக் கொள்ளையடித்து பாராளுமன்றம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாகத் தமது பதவிகளை இராஜிநாமா செய்ய வேண்டும்.'

2004 ஆண்டு பாராளுமன்றம் சென்றவர்கள் பலர் இன்று பாராளுமன்றத்திலேயே இல்லை.

சில நாட்களுக்கு முன்னர், முல்லைத்தீவு நீதவான் சரவணராஜா தனக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறிவிட்டு நாட்டைவிட்டு வெளியேறிய போதும் சிலர் சமூகவலைத்தளங்களில் நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை துறந்து வெளியேறவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அவ்வாறு அவர்கள் பதவி விலகியிருந்தாலும், அது ஒரு நாள் செய்தியாக இருந்திருக்குமே தவிர, அதனால் எந்த நெருக்கடியும் அரசுக்கு ஏற்பட்டிருக்கப்போவதில்லை. அவர்கள் இராஜினாமாச் செய்தால், தேர்தலில் விருப்பு வாக்குகளில் அடுத்த நிலையில் இருக்கின்ற நமது எம்.பிக்களின் சகபாடிகளைத்தான் தேர்தல் ஆணையர் எம்.பிக்களாக நியமித்து அறிவித்திருப்பார். அவர்கள் காட்டில் மழை பெய்திருக்கும் அவ்வளவுதான்.

அவர்கள்தான் சமூக வலைத் தளங்களில் அப்படி எழுதுகிறார்கள் என்றால், தமிழ் அரசியலில் இன்று வயதில் மூத்தவர், பல அரசில் தலைவர்களுடன் கூடவே அரசியல் பயணம் செய்தவர். தனது அரசியல் பணிகளுக்காக ஐ.நாவின் விருது பெற்றவர் என்றெல்லாம் நாம் பெருமைப்படக்கூடிய ஆனந்த சங்கரி ஐயாவும், 2004 இல் வாக்குகளைக் கொள்ளையடித் தார்களாம் என்பதற்காக இப்போது பதவி விலகவேண்டும் என்கிறார். அவர்கள் பதவி விலகினால், 2004 இல வாக்குகளைக் கொள்ளையடித்து பதவிக்கு வந்தவர்களால் பதவியைப் பெறமுடியாது போன ஆனந்தசங்கரி ஐயாவை தேர்தல் திணைக்களம் எம்.பியாக நியமிக்கப்போவதில்லை என்பது அவருக்குத் தெரியாததல்ல.

ஆனால், அவர்கள் அதாவது கூட்டமைப்பு எம்.பிக்கள் இப்போது பதவி விலகினாலும் அடுத்துவரும் தேர்தலில் இந்தத் 'தியாகம்' அவர்களை இன்னும் அதிக வாக்குகளுடன் அல்லவா எம்.பியாக்கும்.

இனி நண்பர் எதற்காக இந்தக் கதையை அனுப்பினார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வதைத் தவிர இந்த ஊர்க்குருவிக்கு வேறு வழி தெரியவில்லை.

அவருக்கு குறுந்தகவல் அனுப்பினேன்.

அவரிடமிருந்து ஒரு வரி மாத்திரமே பதிலாக வந்தது.

'இவர்களையெல்லாம் தலைவர்கள் என்று நடமாடவிட்டிருக்கும் தமிழ் மக்கள்தான் 'ஐயோ' என்று கத்தவேண்டும்'.

-ஊர்க்குருவி.

# விரைவில் எதிர்க்கட்சியினர் பலர் ஐக்கிய தேசிய கட்சியில் இணைவர்!

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தன்னை நீக்கும் தீர்மானம் தனிப்பட்ட வெறுப்பின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குறித்த தீர்மானம் தொடர்பில் உயர் நீதிமன்றம் சரியான தீர்ப்பை வழங்கும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த தீர்ப்பின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டார். (அ)

# இலங்கைச் சிறைகளில் இருக்கும் தமிழக மீனவர்களுக்கு கண் நோய்

கொழும்பு, ஒக். 30

இலங்கையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 27 கடற்றொழிலாளர்களில் 12 பேர் கண் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழக கடற்றொழில் சங்க உறுப்பினர்களைக் கோடிட்டு இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிக நெரிசலான அறைகளில் வைக்கப்பட்டுள்ள அவர்களுக்கு முதல் நாளிலிருந்து, சரியாக நித்திரை கொள்ள முடியவில்லை.

அவர்களில் பலருக்கு விளக்கமறியலில் கால்களை நீட்டக்கூட முடியவில்லை என நீதிமன்றத்தில் சட்டத்தரணியால் சுட்டிக்காட்டப்பட்டுள் ளதாக கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் பி.ஜேசுராஜா கூறியுள்ளார்.

இந்தநிலையில் சிறைப் பகுதிகளில் பரவிய நோய்த் தொற்றால் 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (அ)

# பயணிகளை இடைநடுவில் தவிக்கவிட்டு போதைப்பொருள் உட்கொள்ள சென்ற சாரதி

கொழும்பு, ஒக். 30

பூகொடையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்தை தெல்கொட பகுதியில் பயணிகளுடன் நிறுத்திவிட்டு சாரதி போதைப்பொருள் உட்கொண்ட சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்பட்டு வருவதாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கம்பஹா மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த பேருந்தின் ஓட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கம்பஹா மாவட்ட முகாமையாளர் திலக் வீரசிங்க தெரிவித்தார்.

காவல்துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சாரதி போதைப்பொருள் உட்கொண்டதாக காவல் துறைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் பயணிகளுடன் பேருந்து நிறுத்தப்பட்டு சாரதி கைது செய்யப்பட்டார். (அ)

# காணாமற்போன மாணவர்கள் மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு

மட்டக்கலப்பு, ஒக். 30

மஸ்கெலியா சாமிமலை பிரதேசத்தில் காணாமல் போன மூன்று பாடசாலை மாணவர்கள் மட்டக்களப்பு செங்கலடி பகுதியில் வேலை தேடி சென்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மஸ்கெலியா பொலிஸ் அதிகாரி ஒருவர்,

மஸ்கெலியா கவரவில வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 15 வயதுடைய மூன்று மாணவர்கள் வீடுகளை விட்டு காணாமல் போயுள்ளதாக மாணவர்களின் பெற்றோர்கள் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மஸ்கெலியா பொலிஸார் மாணவர்களை கண்டுபிடிக்க தேடுதல்களை மேற்கொண்ட நிலையில் குறித்த மூன்று மாணவர்களும் மட்டக்களப்பு பிரதேசத்தில் காணப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்த மூன்று மாணவர்களும் கடந்த 27ஆம் திகதி இரவு 9.00 மணியளவில் மட்டக்களப்பு செங்கலடி பகுதியில் வேலை தேடிச் சென்றபோது மாணவர்களை விசாரித்து மட்டக்களப்பு பொலிஸாரிடம் ஒப்படைத்த தன் பின்னர் மஸ்கெலியா பொலிஸாருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்றார்.

அதன்படி, மூன்று மாணவர்களும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)




ஈழநாடு
Eelanadu 30.10.2023 திங்கட்கிழமை ඊළනාඩු
சோபகிருது வருடம், ஐப்பசி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கட்சிகளில் கட்டமைப்பு மாற்றம் தேவை?

சம்பந்தனை பதவி விலக வேண்டுமென்று கூறப்பட்ட கருத்து தமிழ் அரசியல் சூழலில் வாதப் பிரதிவாதங்களை தோற்றுவித்திருக்கின்றது. தமிழரசுக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படையாக தெரிவித்திருந்த விடயம் தொடர்பில், ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் வெளிவருகின்றன. குறிப்பாக திருகோணமலையில் சம்பந்தனுக்கு ஆதரவானவர்கள் சுமந்திரனை விமர்சித்து வருகின்றனர். திருகோணமலை விடயத்தில் கருத்துக் கூறுவதற்கு - அவர் யாரென்றும் கேட்குமளவிற்கு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இன்னொருபுறம், இயலாவிட்டால் புதியவர்களிடம் பதவிகளை ஒப்படைக்கவேண்டும் - அதுவே சரியானதென்றும் கருத்துக்கள் வெளிவருகின்றன.

சுமந்திரன் பற்ற வைத்த நெருப்பு ஒரு விவாதத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது, இலங்கை தமிழரசுக கட்சி மட்டுமல்ல, தமிழ் தேசிய அரசியலை முன்னிறுத்துவதாக கூறிக்கொள்ளும் கட்சிகள் அனைத்திலும் காலத்திற்கு ஏற்றவாறும், தூரநோக்குடன் அரசியலை கையாளக்கூடிய புதிய தலைமுறையொன்றை உள்வாங்குவது அவசியம் - இதில் குறிப்பாக ஒரு பாரம்பரிய கட்சியென்னும் வகையில் - இலங்கை தமிழரசுக் கட்சியில் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவது அவசியம்.

அரசியல் தலைமைத்துவம் இரண்டு வகையானது. ஒன்று புலமைத்துவ நிலையிலான தலைமைத்துவம். இரண்டு, செயல்பாட்டு தளத்திலான தலைமைத்துவம். இந்த இரண்டும் ஒருங்குசேர இருந்தால் சிறப்பானது - ஆனால், இரண்டையும் சமநேரத்தில் கையாளக் கூடியவர்களோ அரிதானது. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு பின்னர் அவ்வாறான ஒருவரை இதுவரையில் தமிழ் சமூகம் கண்டிருக்கின்றதா என்னும் கேள்வியுண்டு. அப்படியான தகுதியுள்ளவர்கள் தலைமை தாங்கும் போது, குறித்த இனம் பெரும் நன்மைகளை பெறும். அவ்வாறில்லாதபோது, இரண்டையும் ஒரிடத்தில் திரட்டக் கூடியவர்களை கட்சிகள் கொண்டிருக்கவேண்டும். அந்த வகையில் வயதில் கூடியவர்கள், தங்களின் அறிவாலும் அனுபவத்தாலும் கட்சிக்கும், சமூகத்திற்கும் பலம் சேர்க்க முடியும். செயல்பாட்டு நிலையில் ஆளுமையுள்ளவர்கள் அந்தத் தளத்தில் இயங்க முடியும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழரசு கட்சியில் முதிய நிலையிலிருக்கும் அரசியல்வாதிகள் தங்களின் அனுபவத்தை வழங்கும் வகையில் செயல்படுவதில் தவறில்லை. ஆனால் அதற்கும் இயலாதவர்கள் தொடர்ந்தும் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. இதேபோன்றுதான் ஏனைய கட்சிகளும். ஒவ்வொரு கட்சிகளும் புதிய அரசியல் சவால்களுக்கு ஏற்ப, தங்களின் கட்சிகளின் கட்டமைப்பை மாற்றியமைக்கவேண்டும்.

கடந்த பதின்நான்கு வருடகால அரசியல் நகர்வுகள், தமிழ் தேசிய கட்சிகளதும், அதன் தலைவர்களதும் ஆற்றலை தெளிவாக இனம் காட்டியுள்ளது. இதற்குப் பின்னரும் தங்களை சகல-கலா வல்லவர்களென்று எவரேனும் கூறினால், அவர்களால் எவ்வித பயனுமில்லை. இந்த நிலையில் தொடர்ந்தும் வெற்று சுலோகங்களில் நேரத்தை விரயம் செய்து கொண்டிருக்காமல், புதிய தலைமுறை ஆற்றலாளர்களை எவ்வாறு கட்சிக்குள் உள்வாங்கலாம், என்னுமடிப்படையில் சிந்திக்க முன்வர வேண்டும். தொடர்ந்தும் இயங்க முடியாதவர்கள், புதியவர்களுக்கு இடமளிக்கும் வகையில் கட்சியின் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

## அரச ஊழியர் கடமை நேரத்தை 12 மணி நேரமாக மாற்றும் சட்டமூலம் அமைச்சரவைக்கு முன்வைப்பு

*கொழும்பு, ஒக். 30*

அரச ஊழியர்கள் ஒரு நாளைக்கு இடைவேளை உள்ளடங்களாக 12 மணி நேரம் மேலதிக நேர கொடுப்பனவுகள் இல்லாமல் பணியாற்ற வேண்டும் என்ற புதிய வேலைவாய்ப்பு சட்டமூலம் ஒன்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டத்தை உருவாக்குவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில், அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் நாட்டின் பிரதான தொழிற்சங்கங்களின் தலைவர்கள் பங்களிப்புடன் அலரி மாளிகையில் நடைபெற்றது.

அந்த விவாதங்களின்படி தயாரிக்கப்பட்ட பரிந்துரைகள் அடங்கிய புதிய வேலைவாய்ப்பு சட்டமூலம் தொடர்பான முன்மொழிவுகளை பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சரவைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த சட்டம் மூலத்தின் அடிப்படையில், எட்டு மணி நேர வேலை நேரத்திற்குப் பின் மேலதிகமாக பணியாற்றும் ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் இல்லாமால் போகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில், வாரத்தில் 45 மணி நேரம் பணிபுரியும் ஒரு ஊழியருக்கு 1 1/2 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்று புதிய சட்டம் பரிந்துரைத்துள்ளது.

புதிய வேலைவாய்ப்புச் சட்டத்தின் அடிப்படையில், ஊழியர் ஓய்வுபெறுவதற்கான குறைந்தபட்ச வயது 55 ஆக இருக்க வேண்டும் என்றும் 60 வயது வரை சேவையில் ஈடுபடுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட ஊழியர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தக் கூடாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## தரமான தேயிலைச் செடிகளை உற்பத்தி செய்யும் நிலையங்களை உருவாக்க விசேட வேலைத்திட்டம்

*கொழும்பு, ஒக். 30*

வேளாண்மைத் திணைக்களத்தின் வருடாந்த கணக்கெடுப்பின் படி, செடி மற்றும் விதை நடும் மையம் வருடத்திற்கு 20 மில்லியன் தேயிலைச் செடிகளை உற்பத்தி செய்வதாக தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில், நாட்டின் தேயிலைத் தொழிலை முதன்மையாக கொண்ட தேயிலைத் தோட்டங்களுக்கு புதிய நடவு மற்றும் மறு நடவு செய்வதற்கு ஆண்டு தோறும் 20 மில்லியன் மரக்கன்றுகள் தேவைப்படுகின்றன.

உயர்தர தேயிலை செடிகள் கிடைக்காததால் தேயிலை தோட்டங்களில் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்படுகிறது.

மற்றும் சமீபகாலமாக தேயிலை தோட்டங்களில் நூற்புழு அல்லது உருண்டைப்புழு நோயின் அதிகரிப்பையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதன் காரணமாக உயர்தர தேயிலை செடிகளை உற்பத்தி செய்வதற்காக விவசாய திணைக்களத்தின் செடி மற்றும் விதை நடுகை நிலையத்தை துரிதகதியில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கன்னோருவ சேவை பயிற்சி நிலையத்தில் விவசாய மற்றும் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் நடைபெற்றது.

விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம் மற்றும் சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் குழு இதில் கலந்துகொண்டனர்.

தற்போது சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தேவைக்காக வருடாந்தம் தேவைப்படும் தேயிலை செடிகளின் அளவு 20 மில்லியன் ஆகும்.

பல தேயிலை விவசாயிகள் தேயிலை உற்பத்தி பிரிவுகளில் இருந்து தேயிலை செடிகளை பெற்றாலும், அந்த நாற்றங்கால்களில் இருந்து பெறப்படும் தேயிலை செடிகளின் அறுவடையானது வட்டப்புழு நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.


தரமான தேயிலை செடிகள் வழங்காத சுமார் 20 தேயிலை உற்பத்தி பிரிவுகளின் உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், 490 மில்லியன் ரூபா மானியம் வழங்கி, மேலும் 200 தேயிலைத் தோட்ட நாற்றங்கால்களை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, உயர்தர தேயிலை செடிகளை உற்பத்தி செய்வதற்கு விவசாய திணைக்களத்தின் ஆதரவை வழங்குமாறு அந்த அதிகார சபையின் அதிகாரிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த தகவல்களை கருத்திற்கொண்டு வருடாந்தம் 20 மில்லியன் தேயிலை செடிகளை உற்பத்தி செய்யும் பொறுப்பை மாற்றுவதற்கு விவசாய திணைக்களம் நேற்று நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்ப்புகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். மறைமுக எதிர்ப் புகள் வந்து போகும். எதிலும் பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வேற்றும தத்தவர் உதவுவார். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டே ஷனரி வகைகளால் லாபமடைவீர்கள்.

**கடகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். உங்களின் நிர் வாகத்திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். உங் களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாம லேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். சிலசூட்சுமங்களைகற்றுக்கொள்வீர்கள்.

**துலாம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள் வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத் தியோகத்தில் மேலதிகாரிகள் ஆதரவு தருவார்கள். எதிர்பாராத வெற்றி கிடைக்கும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண் பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்து வீர்கள். பக்கம்வீட்டாரின் ஆதரவு பெருகும். வாகனங் களை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதி காரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

**மகரம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வாகன வச திப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிச மாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக் கும். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினரின் ஆதரவு பெருகும். வாகனம் சிறு சிறு தொந்தரவு தரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்க மாவீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**ராஜீவ் கொலைக் குற்றச்சாட்டு;**

# சிறப்பு முகாமில் ஜெயகுமாருக்கு திடீரென்று உடல் நிலை பாதிப்பு!

சென்னை, ஒக். 30

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தியின் கொலை வழக் கில் நீண்ட காலம் சிறையில் இருந்து பின்னர், விடுதலையான நிலையில், திருச்சி ஏதிலிகள் சிறப்பு முகாமில் தடுத்து வைக் கப்பட்டுள்ள ஜெயக்குமாருக்கு நேற்று முன் தினம் திடீர் சுகவீ னம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த முகா முக்கு அருகில் உள்ள வைத்திய சாலையில், அவருக்கு, முதலு தவி அளிக்கப்பட்டு பின்னர் திருச்சி அரச பொது மருத்துவ மனைக்கு அவர் மாற்றப்பட்டி ருந்தார்.

அங்கு அவருக்கான சிகிச் சைகள் வழங்கப்பட்ட நிலை யில், மீண்டும் ஏதிலிகள் முகா முக்கு அழைத்துச் செல்லப்பட் டதாக தமிழக ஊடகங்கள் தெரி விக்கின்றன.

இந்தநிலையில், திருச்சி ஏதி லிகள் சிறப்பு முகாம் மற்றும் வைத்தியசாலை வளாகங்களில் காவல்துறை பாதுகாப்பு பலப்ப டுத்தப்பட்டிருந்ததாக குறிப்பி டப்படுகின்றது.

முன்னாள் இந்திய பிரதமர் ரஜிவ்காந்தியின் கொலை வழக் கில் இருந்து முருகன், சாந்தன், றொபர்ட் பயஸ், ஜெயக்குமார் உள்ளிட்டோர் விடுதலையான போதிலும், பயண ஆவணங்கள் குறித்த வழக்கில், அவர்கள் திருச்சி ஏதிலிகள் சிறப்பு முகா மில் தடுத்து வைக்கப்பட்டுள்ள னர். (அ)

# மதவாதம் தவிர பா.ஜ.க.விடம் வேறு கொள்கை கிடையாது!

சென்னை, ஒக். 30

மதவாதம் என்பதைத் தவிர பா.ஜ.க.விடம் வேறு கொள்கை எதுவும் இல்லை என்று முதல் வர் மு.க. ஸ்டாலின் குற்றம் சாட் டியுள்ளார்.

தனியார் செய்தித் தளம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர் காணலின் விவரம் வருமாறு:-

மதவாதம் என்பதைத் தவிர பா.ஜ.க.விடம் வேறு கொள்கை எதுவும் இல்லை! ஆட்சிக்கு வந் தாலும், சாதனைகளைக் காட்டி வாக்குகளைப் பெற முடிய வில்லை. வெறுப்பரசியலை வைத்தே வாக்கு பெற நினைக்கி றார்கள். ஆனால் இந்தியா கூட் டணியின் வலிமை என்பது மத நல்லிணக்கம். நாங்கள் அரசியல்



சட்டம் வரையறுக்கும் கொள் கைகளை நம்பி நிற்கிறோம். பன்முகத்தன்மை கொண்ட இந் திய மாநிலங்களின் உரிமை களை மதித்தல், மக்களின் அடிப்படைப் பிரச்னைகள் மீது கவனம் குவித்தல் போன்றவற் றில் நம்பிக்கை வைத்து நிற்கி றோம்.

ஆகவே, பா.ஜ.க.வின் மத வாத அரசியலுக்கு எதிராக உள்ள அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒருங்கிணைத்து, தேர்தல் களத்தில் உள்ள வெற்றி வாய்ப்புகளுக்கேற்ப கூட்டணிக் கட்சிகளிடையே விட்டுக் கொடுக்கும் தன்மையை ஏற்ப டுத்தி, மக்களின் பேராதரவுடன் வெற்றி பெறுவதே இண்டியா கூட்டணியின் தேர்தல் உத்தி. அதில் வெற்றி பெற முடியும் என்பதை சமீபத்திய இடைத் தேர்தல்கள், கர்நாடக மாநிலச் சட்டமன்றத் தேர்தல் போன் றவை காட்டியிருப்பதைப் பார்த் திருப்பீர்கள்-என்றார். (அ)

# 1,500 புத்தகங்கள் சிறை நூலகங்களுக்கு வழங்கிய முதல்வர்

சென்னை, ஒக். 30

முதல்வர் மு.க.ஸ்டாலின் தன்னை சந்திக்க வருபவர்கள் அளித்த புத்தகங்களில் 1,500 புத்தகங்களை தமிழகத்திலுள்ள சிறை நூலகங்களுக்கு நன்கொ டையாக வழங்கினார்.

இதன்படி, சிறை நூலகங்க ளில், புத்தகங்களின் எண்ணிக் கையை உயர்த்தும் விதமாகவும், சிறைவாசிகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்கு இப்புத் தகங்கள் பேருதவியாக அமை யும் என்பதை கருத்தில்கொண் டும், முதல்வர் மு.க.ஸ்டாலின் தனக்கு வழங்கப்பட்ட 1,500 புத்தகங்களை தலைமைச் செய லகத்தில் சிறைத்துறை சார்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

இதில், சட்டத்துறை அமைச் சர் எஸ்.ரகுபதி, உள்துறை செய லாளர் பெ.அமுதா உள்ளிட் டோர் பங்கேற்றனர். (அ)

# செந்தில் பாலாஜியின் பிணை மனு; உச்ச நீதிமன்றில் இன்று விசாரணை

புதுடில்லி, ஒக். 30

அமைச்சர் செந்தில் பாலா ஜிக்கு பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறை யீட்டு மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வரவுள்ளது.

சட்டவிரோத பணப் பரி வர்த்தனை தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையால் கடந்த ஜூன் 14ஆம் திகதி கைதான அமைச்சர் செந்தில் பாலாஜியின் பிணை மனுவை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் இருமுறை தள்ளு படி செய்தது. கைது செய்யப் பட்ட பிறகு இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதால் அவரது உடல்நிலையை சுட்டிக் காட்டி அவருக்கு பிணை வழங் கவேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. செந்தில் பாலாஜிக்கு பிணை வழங்கக் கூடாது என அமலாக் கத்துறை தரப்பில் கடுமையாக ஆட்சே பம் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி எம்.ஜெயச்சந்தி ரன், அமைச்சர் செந்தில் பாலா ஜியின் பிணை மனுவை தள்ளு படி செய்துகடந்த ஒக்.19 இல் உத்தரவிட்டிருந்தார்.

அன்றைய தினமே செந்தில் பாலாஜி தரப்பில் பிணை கோரி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் அனி ருத்தா போஸ், பீலா எம்.திரி வேதி ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வரவுள்ளது. (அ)

# புதிய கடற்தொழில் சட்டம் நிறைவேறினால் இலங்கைக் கடல் வெளிநாட்டு சக்திகளிடம்!

## இலங்கை மீனவ தொழிற்சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 30

**புதிய கடற்தொழில் சட்டம் நிறைவேறுமானால் இலங்கையின் வளமான கடற்பரப்புக்கள் வெளிநாட்டு சக்திகளிடம் சென்றடைந்து விடும் என இலங்கை மீனவ தொழிற்சங்கத்தின் பொதுச்செயலாளர் தினேஷ் சுரஞ்சன் பெனாண்டோ தெரிவித்தார்.**

**நேற்று முன் தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் இடம் பெற்ற வடமாகாண மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

இலங்கையின் சுதந்திரமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற மீனவ சமூகத்தை மீன் பிடிக்கில் இருந்து அப்புறப்படுத்தி வெளிநாட்டு பல்தேசிக் கம்பெனிகளுக்கு எமது கடல் வளத்தை தாரை வார்க்கும் நோக்கில் புதிய சட்டத்திருத்தம் இடம்பெற்றுள்ளது.

புதிய கடற்தொழில் சட்டத்தை மீனவ சங்கங்களோ சமாசங்களோ கோராத நிலையில் யாரின் தேவைக்காக அல்லது யாரின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக புதிய சட்டத்திருத்தத்தை கொண்டு வர உள்ளார்கள் என்ற சந்தேகம் எழுகிறது.

நாம் 1996 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கடற் தொழில் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வந்து இழுவைமடித் தொழிலை முற்தாக தடை செய்யுமாறு பல தடவைகள் அரசாங்கத்திற்கு கோரிக்கை முன்வைத்துள்ளோம், இதுவரை நிறைவேறவில்லை.

ஆனால் தற்போது மீனவ சமூகம் கோராத புதிய சட்ட திருத்தத்தின் மூலம் வெளிநாட்டுப் படகுகளை இலங்கை கடற்பரப்புக்குள் உள்நுழைய சட்ட நீதியான அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது.

முன்னாள் கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன காலத்தில் இலங்கை கடற்பரப்புக்குள் சீனக் கப்பல்கள் மீன்பிடியில் ஈடுபட்டன.

இலங்கையில் சுமார் ஐந்து இலட்சம் கிலோமீற்றர் வளமான கடற் பிரதேசத்தை வெளிநாட்டு சக்திகளுக்கு தாரை வார்க்கும் நோக்கில் புதிய சட்ட திருத்தத்தில் கடற்தொழில் அமைச்சருக்கும் பணிப்பாளருக்கும் அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று இடங்களையும் இயற்கை வளங்களையும் அந்நிய நாடுகளுக்கு விற்று விட்ட நிலையில் எஞ்சிய கடல் வளத்தையும் வெளிநாடுகளுக்கு விற்கப் போகிறார்கள்.

இலங்கையில் பிறந்த மீனவ சமூகம் தமது தொழில் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு எவ்வித அருகதை அற்றவர்களாக கட்டிப் போடுவதற்கு புதிய சட்டத்தின் ஊடாக வழி வகுக்கப்படுகிறது.

ஆகவே ஆபத்தான கடற்தொழில் சட்டத்தை எதிர்ப்பதற்கு இலங்கையில் உள்ள ஒட்டு மொத்த மீனவ சமூகங்களும் தயாராக வேண்டும்-என்றார்.

# மருந்து தட்டுப்பாடு காரணமாக சத்திர சிகிச்சைகள் மட்டுப்பாடு!

கொழும்பு, ஒக். 30

மருந்துகள் மற்றும் இரசாயன பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரச்சினைகளை தீர்க்க இதுவரை சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த சங்கத்தின் பொதுச் செயலர் எஸ்.பீ.மெதிவத்த குறிப்பிட்டார்.

சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, சுகாதாரத்துறையில் நிலவும் பிரச்னைகளை தீர்ப்பதற்கு தற்போதைய அமைச்சர் தலையிடவேண்டும் என அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

(அ)

# 9 மருந்து வகைகளில் சிக்கல்!

கொழும்பு, ஒக். 30

இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் ஊடாக 2022ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட 9 மருந்து வகைகளில் பாரிய சிக்கல்கள் காணப்படுவதாக கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக 156 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நட்டம் ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் கொள்வனவு செய்யப்பட்ட சில மருந்து வகைகளின் தரம், காலாவதி திகதி உள்ளிட்ட சில விடயங்களில் சர்ச்சைகள் உள்ளதாக அந்த கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# மீண்டும் துப்பாக்கிச்சூடு!

## ஆபத்தான நிலையில் ’அக்போ’

கொழும்பு, ஒக். 30

இந்த ஆண்டின் தொடக்கத்தில் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் ‘அக்போ’ என்ற யானை மீது சனிக்கிழமை மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் நிலையில் தற்போது யானையின் உடல்நிலை மோசமாக இருப்பதாக கூறப்படுகின்றது.

அதன்படி, திறப்பனை வண்ணமடுவ ஆற்றுக்கு அருகில் இருந்து யானை மீது நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக நம்பப்படுகிறது.

இதனால் யானை தற்போது ஆபத்தான நிலையில் இருப்பதாக கால்நடை மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டின் தொடக்கத்தில் அக்போ யானை மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில் யானையின் இடப்பக்க காலில் காயம் ஏற்பட்டது.

இதற்காக யானை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில், மீண்டும் இந்த அராஜகம் இடம் பெற்றுள்ளது.

(அ)

# மருந்துக் கூட்டுத்தாபன நிலுவையை செலுத்த விசேட அமைச்சரவை பத்திரம் அடுத்த வாரம்!

## அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 30

மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் பல்வேறு விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையை செலுத்துவதற்கான நிதியை விடுவிப்பதற்கான விசேட அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தொழில்துறை மாற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்துகளுக்கான கட்டணம் செலுத்தல் தொடர்பில் சுகாதார மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலின் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நான் உள்ளிட்டவர்களில் பங்கேற்றிருந்தோம். அச்சமயத்தில், விசேட அமைச்சரவை அனுமதியின் கீழ் ஒதுக்குவதற்கு தேசிய வரவு-செலவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த வாரம் சமர்ப்பிக்குமாறு வரவு-செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மருந்துகளை கொள்வனவு செய்தல் மற்றும் நிலுவையில் உள்ள கட்டணங்களைச் செலுத்துதல் போன்ற அத்தியாவசிய சுகாதார செலவுகளுக்கு எவ்வித தாமதமும் நிதி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், போலி அனுமதிப்பத்திரங்களை பயன்படுத்தி மருந்துகளை இறக்குமதி செய்வதை தடுப்பதற்கும் விசேட நடவடிக்கைகளை சுங்கத் திணைக்களத்துடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் வெகு விரைவில் மருந்து தட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள் மற்றும் தரம்குறைந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதை தடுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் விரைந்து முன்னெடுக்கப்பட்டு நிறைவுக்கு கொண்டு வரப்படும்-என்றார். (அ)

# ஒப்பந்தக் கொலையாளியாக செயற்பட்ட ஒருவர் சிக்கினார்!

கொழும்பு, ஒக். 30

ஒப்பந்தக் கொலையாளியாக செயற்பட்டுவந்தாக கூறப்படும் நபர் ஒருவரை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

திட்டமிடப்பட்டகுற்றச் செயல்களில் ஈடுபடும் ஹீனட்டியான மகேஷ் என்பவரினால் வழங்கப்படும் ஒபந்தங்களுக்கமைய இவர் கொலைகளை மேற்கொண்டு வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதானவர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற ஒருவரென பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 5 கிராமுக்கு அதிகமான ஐஸ் ரக போதைப்பொருள் மற்றும் போலி வெளிநாட்டு கடவுச் சீட்டு என்பன மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபரிடம் மேற்கொண்ட விசாரணையில், ஹீனட்டியான மகேஷின் அறிவுறுத்தலின் பேரில் மற்றொரு கொலையை செய்வதற்கு தாம் தயாரானதாகவும், அதன் பின்னர் போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாடு செல்வதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் அவர் வாக்குமூலம் அளித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# டலஸ் தலைமையில் பொது எதிரணி கட்சிகளுடன் பேசுவதற்கு தீர்மானம்

கொழும்பு, ஒக். 30

எதிர்வரும் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் பொது எதிரணி அரசியல் கூட்டமைப்பை உருவாக்கி போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட கட்சிகளுடன் கலந்துரையாட சுதந்திர மக்கள் சபை தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசியல் கூட்டணி குறித்து தனித்தனியாக விவாதித்து வருவதால், அந்த குழுவின் ஒற்றுமைக்கு இடையூறாக இருப்பதால், அந்த நடவடிக்கைகளை டலஸ் அழகப்பெரும தலைமையின் கீழ் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பொதுத் தேர்தலிலோ எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டணியுடன் போட்டியிடுவது தொடர்பில் அந்தக் குழுவின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறியமுடிகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கலந்துரையாடலில் கலந்துகொண்டால், அதன் முன்னேற்றம் குறித்து உறுப்பினர் குழுவிற்கு தெரியப்படுத்துவார் என குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(அ)

# அணுகுமுறை மாற்றம் அவசியமெனில் கட்சிக்கு தலைமை மாற்றம் கட்டாயம்!

## சி.வி.கே.சிவஞானம் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக். 30

**இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அணுகுமுறை மாற்றம் அவசியமானால் கட்சிக்க தலைமை மாற்றம் தேவையாக உள்ளதென தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், வடமாகாண அவைத்தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சமகால நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் விடுதலைப் பயணித்தில் பங்கெடுத்து வருகின்ற அரசியல் தரப்புக்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மூத்த கட்சியாகவுள்ளது.

இந்தக் கட்சியின் அண்மைக் கால அடைவுமட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களும், வாதப்பிரதிவாதங்களும், விமர்சனங்களும் காணப்படுகின்றன.

அந்த வகையில் கட்சியை அடுத்து வரும் தலைமுறையினரின் மத்தியில் முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் அணுகுமுறை மாற்றம் அவசியமாக உள்ளது.

எனவே, வெளிப்படைத்தன்மையுடன் கட்சியில் அணுகுமுறை மாற்றமொற்று ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் தலைமைத்துவ மாற்றம் அவசியமாகின்றது.

இந்த தலைமைத்துவமாற்றம் என்பது வெறுமனே தலைவர் என்கிற தனிநபரை நோக்கிய விடயமாக கருதக்கூடாது. தலைவர், செயலாளர் பொருளாளர் உள்ளிட்ட அனைத்து மேல்மட்ட நிர்வாகக் கட்டமைப்பிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதன் மூலமாகவே தமிழரசுக்கட்சிக்கும், மக்களும் இடையில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இடைவெளிகளை குறைத்து மீண்டும் உத்வேகத்துடன் பயணத்தை முன்னெடுக்க முடியும் - என்றார்.

(அ)

# காஸாவிலிருந்து வெளியேறமுடியாமல் சிக்கி தவித்துவரும் 17 இலங்கையர்கள்!

## அகதிமுகாமிலும் கிறிஸ்தவ தேவாலயத்திலும் தஞ்சம்

கொழும்பு, ஒக். 30

இஸ்ரேல் காசா மீதான தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் முழுமையான போர் குறித்த அச்சங்களிற்கு மத்தியில் மூன்று குடும்பங்களை சேர்ந்த 17 இலங்கையர்கள் தொடர்ந்து காஸா பள்ளத்தாக்கில் சிக்குண்டுள்ளனர்.

இலங்கையர்கள் தற்போது தென்காசாவில் தஞ்சமடைந்துள்ளனர், ஆனால் எகிப்திற்கு செல்லும் ரபா எல்லை தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளதால் அவர்களை வெளியேற்ற முடியாத நிலையில் இலங்கை அதிகாரிகள் உள்ளனர்.

எகிப்திற்கு செல்வதற்கு இதுவே ஒரே வழி மேலும் இஸ்ரேலிய படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத ஒரேவழியாக இது காணப்படுகின்றது.

மூன்று குடும்பங்களை சேர்ந்த 17 இலங்கையர்களும் தற்போது பாதுகாப்பாக உள்ளனர் எனினும் மோசமான நிலையில் வாழ்கின்றனர் என பலஸ்தீனத்திற்கான இலங்கைத் தூதுவர் நவலகே பேர்னாட் கூரே தெரிவித்துள்ளார்.

அந்த குடும்பங்களுடன் ரமல்லாவில் உள்ள தூதரகம் நாளாந்த தொடர்புகளை பேணுகின்றது. இலங்கையர்களில் சிலர் அகதிமுகாமில் தஞ்சமடைந்துள்ளனர். ஒரு குடும்பம் கிறிஸ்தவ தேவலாயமொன்றில் தஞ்சமடைந்துள்ளது.

அவர்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். அருகில் குண்டுவீச்சுக்கள் இடம்பெறுகின்றன. உணவு, மருந்து, குடிதண்ணீர் போன்றவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என தெரிவித்துள்ள தூதுவர், நாங்கள் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

(அ)



# 104 கிலோ கஞ்சாவுடன் இருவர் வட்டுக்கோட்டையில் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஒக். 30

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டுக்கோட்டை பகுதியில் 104 கிலோ எடையுடைய கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை வீதியூடாக ஓட்டோவில் கஞ்சாவை எடுத்துச் செல்லும் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அதனையடுத்து, கைதான இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

தொடர்ந்து, சந்தேக நபர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# சுமணரத்ன தேரர் மீதான முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

கொழும்பு, ஒக். 30

அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

மங்களராமய அம்பிட்டிய சுமண தேரர் தமிழர்களை வெட்டுவேன் என்பதுள்ளிட்ட இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர் மீது நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு கடிதத்தினை அனுப்பியுள்ளதோடு, மனோகணேசன், வேலுகுமார் உள்ளிட்டவர்களும் தேரரைக் கைது செய்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதேநேரம், மனித உரிமை செயற்பாட்டாளர் ராஜீவ்காந் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளதோடு ஆதாரங்களையும் கையளித்து நடவடிக்கைகளை முன்னெடுக்கமாறு வலியுறுத்தியுள்ளார். தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தேரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

இந்நிலையில், குறித்த விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்,

அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் பொலிஸார் விசேட விசாரணைகளை முன்னெடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை அமுலாக்குவதற்கும், அமைதியைப் பேணிக்காப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

ஆகவே, முறைப்பாடுகள் தொடர்பில் தற்போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. அந்த வகையில் வீணான சந்தேகங்களை வெளியிடவேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை-என்றார்.

(அ)

# படகுச்சேவை குறித்து நேரில் ஆராய குறிகாட்டுவான் சென்றார் டக்ளஸ்!



யாழ்ப்பாணம், ஒக். 30

குறிகாட்டுவான் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் காலை மேற்கொண்டார்.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் படகுகள் தரிப்பதில் காணப்பட்ட இட நெருக்கடிகளைச் சீர்செய்து ஒழுங்குபடுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீண்ட ஆழ்கடல் பயணத்தை மேற்கொள்ளும் நெடுந்தீவு பயணிகள் படகுகளுக்கே இறங்குதுறையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், நேர அட்டவணைப்படி சீராக இறங்குதுறையில் படகுகள் தரித்து மக்களுக்கு அசௌகரியமற்ற சேவை வழங்குவதை ஒழுங்குபடுத்தி உறுதிப்படுத்துவதற்காக இரண்டு கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற படகுகளை தரிப்பதற்கு ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படாமையினால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

குறிப்பாக, மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் பயன்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடுகின்ற நெடுந்தீவு மக்களும் அரச ஊழியர்களும் பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக, இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்நிலையில், நெடுந்தீவு மற்றும் நயினாதீவு பயணிகள் படகுச் சேவை உரிமையாளர்கள், கடற்படை மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து கலந்துரையாடியதை தொடர்ந்து தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வடக்கு மாகாண அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவுவதற்கு ஜனாதிபதி ரணிலிடம் யோசனை!

## திட்ட முன்மொழிவைக் கையளித்தார் முன்னாள் ஆளுநர் ஜீவன்

கொழும்பு, ஒக். 30

**‘வடக்கு மாகாண அபிவிருத்திக்கான புத்தாக்கம்’ எனும் தலைப்பில் வடக்கு மாகாண அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவுவதற்கான யோசனையொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்கப்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் அதற்கான திட்ட முன்மொழிவை வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாராஜா கையளித்துள்ளார்.**

**இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாண அபிவிருத்தி என்ற தலைப்பில் அதிகாரிகளிடம் உரையாற்றுகையில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு இணையாக வடமாகாணத்திலும் பாரிய அபிவிருத்தியொன்று இடம்பெற வேண்டுமென நம்புகின்றேன். யுத்தத்தினால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியில் எதிர்பார்த்த அளவை இன்னும் எட்டவில்லை. எனவே, நாட்டை அந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு 10 வருடத் திட்டத்தின் கீழ் செயற்படுவோமென நம்புகிறோம். இந்த முடிவை அடைய, வெளிநாட்டு உதவிகள் மட்டுமல்ல, புலம்பெயர் நாடுகளின் உதவியையும் பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அமைவாக நான் ‘வடமாகாண அபிவிருத்திக்கான புத்தாக்கம்’ எனும் தலைப்பில் வடமாகாண அபிவிருத்தி அதிகார சபையை உருவாக்குவதற்கான யோசனையை முன்வைத்தபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை ஏற்றுக் கொண்டார். அதனையடுத்து அதற்கான திட்ட முன்மொழிவு தற்போது அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண அபிவிருத்தி அதிகாரசபையானது, சட்ட வலுவுள்ளதொரு அமைப்பாகும். தென்மாகாண அபிவிருத்தி அதிகாரசபையானது கடந்த 20 வருடங்களாக செயற்படுகின்றது. இது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

அதனடிப்படையில் வடக்கில் அபிவிருத்தி அதிகாரசபை செயற்படுத்தப்படுவதன் ஊடாக வெளிநாட்டு முதலீடுகளுக்கு அப்பால், புலம்பெயர்ந்துள்ளவர்களின் முதலீடுகள் மற்றும் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பாரிய சந்தர்ப்பமொன்று ஏற்படுவதற்கான நிலைமைகள் உள்ளன.

ஆகவே குறித்த முன்மொழிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுகின்றபோது, அனைத்து தரப்பினரும் அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டுமென எதிர்பார்க்கின்றேன்-என்றார்.

(அ)

# தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பணிக்குழாமினரை பணி நீக்குவதற்கு முடிவு!

கொழும்பு, ஒக். 30

கடந்த காலங்களில் பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட பணிக்குழாமினரை பணி நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐ.டி.எச் தொற்று நோயியல் வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஆனந்த விஜே விக்ரம, அந்த அதிகார சபையின் தலைவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இது குறித்து சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் வினவியது.

அதற்கு பதிலளித்த அவர், இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இலங்கை தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டத்தின் கீழ், நாட்டில் உள்ள மருந்துகளின் கையிருப்பு தொடர்பான தரவுகளை பேணுவதற்கு குறித்த அதிகாரசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

எனினும், சில ஆண்டுகளுக்கு முன்பு, அதன் தரவு அமைப்பு சர்ச்சைக்குரிய முறையில் நீக்கப்பட்டமை குறித்து பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அதன்பின்னர், மருந்து கொள்வனவு தொடர்பில் ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மீது பல தரப்பினரால் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டன.

(அ)

# மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் கைது!

கொழும்பு, ஒக். 30

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி ஏனைய வாகனங்களுடன் மோதிச் சேதத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு வெள்ளவத்தை, மெரீன் டிரைவ் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெள்ளவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் 5 லட்சம் ரூபா பெறுமதியில் வாராந்த உதவிகள்



வடமராட்சி, ஒக. 30

ஞானச்சுடர் 310 ஆவது மலர் வெளியீடும், 5 லட்சத்து 22,500 ரூபா செயற்றிட்ட உதவிகள் வழங்கலும் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் சிறப்பாக இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் ஞானச்சுடர் ஐப்பசி மாத 310 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் ஆ.சிவநாதன் ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்தி சங்கத்தால் நடத்தப்பட்ட சைவத்திருவிழா விழாவில், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதற்காக 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக சிறுவர்,சிரேஷ்ட பிரஜைகள், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுக்காக 40 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடைகள் வழங்கப்பட்டன.

ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 03 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

செம்பியன்பற்று வடக்கு பிரதேசத்தை சேர்ந்த உடுத்துறை மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன், வல்வெட்டித்துறை - ஊறணி குடியேற்றத்திட்டத்தை சேர்ந்த மாற்றுவலுவுடைய குடும்பத்தை சேர்ந்த மாணவி, மன்னார் - சிவபுரம், திருக்கேதீஸ்வரத்தை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்த மாணவி ஆகியோருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களை தெரிவு செய்து குடும்ப அங்கத்தவர்களுக்கேற்ப அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. 3 லட்சம் ரூபா பெறுமதியில் இவை வழங்கப்பட்டன. மாதாந்தம் அரிசி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# வருமான வரி மோசடிகளை தடுக்க தகவல் கட்டமைப்பு

## அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஒக். 30

வருமான வரி ஏய்ப்பு மற்றும் மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மற்றும் நபர்களை கண்டறியும் நவீன தொழில்நுட்பத்திலான விசேட தகவல் கட்டமைப்பை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திலிருந்து செயல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்கவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சீரற்ற அணுகல் மேலாண்மை தகவல் கட்டமைப்பு என்ற தொழில்நுட்பத்தையே வருமான வரியேய்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அரசாங்கம் பயன்படுத்தவுள்ளது.

தேசிய வருமான வரி திணைக்களத்தின் கீழ் இந்த நவீன தொழில்நுட்ப தகவல் கட்டமைப்பு செயல்படுத்தப்படும்.

வங்கிகள், சுங்கம் மற்றும் கலால் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் இந்த தகவல் கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்படவுள்ளன. மேலும் இந்த தொழில்நுட்பத்தின் ஊடாக வரி வருமானத்தை எளிதாக சேர்த்துக்கொள்ள முடிவதுடன் வரி மோசடிகளில் ஈடுப்படுபவர்களையும் அடையாளம் காண முடியும். எவ்வாறாயினும் இந்த திட்டம் பல வருடங்களுக்கு முன்பாகவே இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பல அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு சென்று குறித்த தொழில்நுட்ப கட்டமைப்பு குறித்து பயிற்சிகளை பெற்று வந்திருந்தனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பல்வேறு தடைகள் ஏற்பட்டு செயல்படுத்த முடியாமல் போனது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், மீண்டும் வருமான வரி மோசடிகளை தடுக்கவும் வரி வருமானத்தை அதிகரிக்கவும் வகையில் குறித்த திட்டத்தை முன்னெடுக்க உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொதுஜன பெரமுன மீது எறியப்படும் கற்களை நாம் பாதைகளாக்குவோம்!

## கூறுகின்றார் ரஞ்சித் பண்டார



கொழும்பு, ஒக். 30

வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பு தொடர்பில் பொது ஜன பெரமுன கட்சி இறுதி தீர்மானம் மேற்கொள்ளவில்லை. இந்த விடயம் தொடர்பில் கட்சியாகவே இறுதியாக தீர்மானத்தை மேற்கொள்ளும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன கட்சியில் வாக்குகேட்டு பாராளுமன்றம் தெரிவாகி, பின்னர் சுயாதீனமாக செயற்படுபவர்களே கட்சிமீது கல்லெறிகின்றனர். இது பற்றி நாம் பதற்றம் அடையவில்லை.

அந்த கற்களை வைத்து பாதை அமைத்து பயணிப்போம். எமது பயணம் மெதுவானதாக இருக்கலாம். ஆனால் இலக்கு நோக்கியது. தற்போது கல்லெறிபவர்கள் எம் வெற்றிக்கு பார்வையாளர்களாக மாறுவார்கள்.

அவர்களுக்கு பெரிய சவால் அல்ல, சிறியதொரு சவாலை விடுக்கின்றேன், முடிந்தால் அடுத்துவரும் ஏதேனும் ஒரு தேர்தலில் தனித்து போட்டியிட்டு வெற்றி பெற்று காட்டுங்கள்.

அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பில் கட்சியின் உத்தியோகப்பூர்வ நிலைப்பாட்டையே கட்சி செயலாளர் வெளிப்படுத்தியுள்ளார்-என்றார்.

(அ)

# சுமனரத்ன தேரர், சாணக்கியன் உட்பட 40 பேருக்கு எதிராக பொலிஸ் வழக்கு!

## ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு வெளியிட்டதால்

மட்டக்களப்பு, ஒக். 30

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மட்டக்களப்புக்கு ஒக்ரோபர் 7ஆம் 8 ஆம் திகதிகளில் விஜயம் செய்திருந்தார். அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து செங்கலடி மற்றும் நகரில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், 40 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பௌத்த தேரர்கள், கால் நடை பண்ணையாளர்கள், அரசியல் வாதிகள் ஊடகவியலாளர்கள் உட்பட 40 பேருக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

நீதிமன்ற கட்டளையை மீறி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் ஏறாவூர், மட்டக்களப்பு நீதிமன்றங்களில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்கு தொடர்ந்துள்ளதாக அந்தந்த பொலிஸ் நிலையங்களின் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் ஆண்கள் தேசிய பாடசாலை 150 வருட நிறைவு விழாவுக்கு கடந்த 7ஆம் திகதியும், செங்கலடி மத்திய மகாவித்தியாலய 149 வருட நிகழ்வுக்கு 8ஆம் திகதியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

இந்த நிலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மட்டு மேய்ச்சல் தரை பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரையில் இருந்து சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்றுமாறு கோரி ஒரு புறமும் அந்த பகுதியில் சட்டவிரோதமாக குடியேறிய சிங்கள மக்கள் தமக்கு அந்த நிலம் வேண்டும் எனக் கோரி மற்றொரு புறமாகவும் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட போவதாக அறிவித்திருந்தனர்

இந்நிலையில் அந்த ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை தாங்குபவர்களுக்கு தடை உத்தரவு வழங்குமாறு நீதிமன்றங்களில் பொலிஸார் விண்ணப்பம் செய்திருந்தனர்.

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காமல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதித்ததுடன் அதனை மீறி வீதியை மறித்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் போக்குவரத்து விதிமுறையின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளை வழங்கியது.

இந்தநிலையில் மிக்கேல் கல்லூரிக்கு ஜனாதிபதி 7ஆம் திகதி வருகை தந்திருந்தபோது அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து, மட்டு. விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தன தேரர் தலைமையிலான மேய்ச்சல் தரை சட்டவிரோத குடியேற்றவாசிகள் கொண்ட குழுவினர் கல்லூரிக்குள் உட்புகுவதற்கு முயற்சித்தனர். வீதித் தடைகளை ஏற்படுத்தி அவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன் நீதிமன்ற கட்டளையை தெரிவித்தபோதிலும் அதனை மீறி வீதியை மறித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செங்கலடி மத்திய மாகாவித்தியாலயத்துக்கு ஜனாதிபதி 8ஆம் திகதி வருகைதந்திருந்த போது அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்களை செங்கலடி-வாழைச்சேனை பிரதான வீதி கொம்மாந்துறை விநாயகர் வித்தியாலயத்துக்கு அருகில் பொலிஸார் வீதித் தடையை ஏற்படுத்தி தடுத்து நிறுத்திய போது வீதியை மறித்து பண்ணையாளர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்பினர், அரசியல் வாதிகள் நீதிமன்றக் கட்டளையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நீதிமன்ற கட்டளைகளை அவமதித்து பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 7ஆம் திகதி ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மற்றும் இரு தேரர்கள் உட்பட 6 பேருக்கு எதிராக மட்டு. தலைமையக பொலிஸார் மட்டக்களப்பு நீதவான் நீதின்றில் வழக்கு தாக்குதல் செய்து அவர்களிடம் முறைப்பாடு பெற்று அவர்களை எதிர்வரும் 27ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பானை வழங்கினர்.

அதேவேளை 8ஆம் திகதி நீதிமன்ற கட்டளையை மீறி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியேந்திரன், ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், தமிழ்தேசிய மக்கள் முன்னணி கட்சி சட்டத்தரணி சுகாஸ், தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி, மற்றும் பண்ணையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஊடகவியலாளர் உட்பட 34 பேருக்கு எதிராக ஏறாவூர் பொலிஸார் வழக்கு தாக்தல் செய்து அவர்களிடம் வாக்கு மூலங்கள் பெற்று அவர்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி ஏறாவூர் சுற்றுால நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்ற அழைப்பாணையை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு இரு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 40 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக அவர்களிடம் வாக்கு மூலங்களை பெறும் விசேட நடவடிக்கை ஒன்றை சனிக்கிழமை பொலிஸார் ஆரம்பித்து அவர்களை வீடுவீடாக தேடி வாக்கு மூலங்களை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நீதிமன்ற அழைப்பாணைகளை வழங்கும் நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்தி மாணவி தங்க பதக்கம் பெற்று வரலாற்று சாதனை

மட்டக்களப்பு, ஒக். 30

கல்வி அமைச்சின் மூலம் இவ்வாண்டுக்காக நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ் மொழித் தின போட்டிகளின்போது அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார் என கல்லூரியின் அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரிவித்தார்.

அகில தமிழ் மொழித் தின போட்டிகளின் தேசிய மட்டப் போட்டிகள் நேற்று முன் தினம் சனிக்கிழமை கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் இடம் பெற்றது.

இதன்போது ஐந்தாம் பிரிவு போட்டியில் சிறுகதையாக்கம் நிகழ்ச்சியில், பங்கு பற்றிய இப் பாடசாலை மாணவி ஏ.எல். பாத்திமா நுஸ்றா தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தினை சுவீகரித்துள்ளார். (அ)



# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய மாணவி டிலக்சனா கட்டுரைப் போட்டியில் முதலிடம்!




மட்டக்களப்பு, ஒக். 30

கல்வியமைச்சு அகில இலங்கை ரீதியில் நடாத்திய தேசியமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை )- களுவாஞ்சிகுடி தரம் 13 கலைப்பிரிவு மாணவி பு.டிலக்சனா கட்டுரை வரைதல் இலக்கியம் போட்டியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டி கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் கடந்த கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (அ)

# பேராதனை பல்கலை மாணவர்களுக்கு கரையோர புவிவெளியுருவவியல் ட்ரோன் தொழில்நுட்பப் பயிற்சி

அம்பாறை, ஒக். 30

தென்கிழக்குப்பல்கலைக் கழகத்தினால் பேராதனை பல்கலைக்கழக புவியியற்துறை மாணவர்களுக்கு கரையோர ஆய்வுகளில் புவிவெளியுருவவியலில் ட்ரோன் தொழில்நுட்ப பிரயோகம் தொடர்பான கலந்துரையாடலும், களப்பயிற்சியும் தென்கிழக்குப்பல்கலைக்கழக புவியியற் துறைத்தலைவர் விரிவுரையாளர் கே.நிஜாமிர் தலைமையில்,பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல் அவர்களின் ஒருங்கிணைப்பில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரபீக்கா அமீர்தீன் ஆரம்ப உரையாற்றியதோடு, பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் எம்.எஸ்.எம். ராசிக் அவர்கள் கலந்துரையாடலின் நோக்கம் பற்றி மாணவர்களுக்கு விளக்கினார்.

மேலும் பேராசிரியர் முதிக சுமனஜித் பெரேரா மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்த ஜெயகுமார பேராதனை பல்கலைக்கழக புவியியற்துறை இறுதிவருட விஷேட மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் விரிவுரையாற்றிய தென்கிழக்கு பல் கலைக்கழக புவியியற்துறைத்தலைவர் கே.நிஜாமிர் இலங்கையின் தென்கிழக்கு பிராந்திய பகுதியில் கடலரிப்பு மற்றும் அவற்றிக்கான காரணங்களை விளக்கியதோடு அவை தொடர்பான ஆய்வுகளின் ட்ரோன் தொழில் நுட்பத்தின் பிரயோகம், வினைத்திறன் மற்றும் ஆய்வு விஞ்ஞானத்தன்மை தொடர்பாகவும் விளக்கினார்.

மேலும் மாணவர்களுக்கு ட்ரோன் தொழில்நுட்ப வெளிக்கள பயிற்சியளிக்கப்பட்டதோடு தென்கிழக்கு கரையோரபிரதேசங்களில் களப்பயணங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. (அ)



# மோசடியில் ஈடுபட்ட தமிழரின் நிறுவனத்துக்கு பிரான்ஸில் பெருந்தொகை அபராதம் விதிப்பு!

பாரிஸ், ஒக். 30

பணமோசடி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட வரி (வற்) மோசடிக்காக லைக்கா மொபைல் நிறுவனத்தின் பிரெஞ்சு நிறுவனங்களுக்கு பாரிஸ் நீதிமன்றம் வியாழக்கிழமை 10 மில்லியன் யூரோக்கள் அபராதம் விதித்தது.

குழுவின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கிறிஸ்டோபர் டூலியும் வற் மோசடிக்கு உடந்தையாக இருந்ததற்காக சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டார்.

சுபாஸ்கரன் அல்லிராஜாவுக்குச் சொந்தமான லைக்கா மொபைல் நிறுவனம், இந்தத் தீர்மானத்துடன் உடன்படவில்லை என்றும், மேல்முறையீடு செய்திருப்பதாகவும் கூறியுள்ளது.

2014 மற்றும் 2016 இற்கு இடையில் 17 மில்லியன் யூரோக்களை உள்ளடக்கிய “சிக்கலான மற்றும் விரிவான பணமோசடி முறைகளில் நிறுவனங்கள் தெரிந்தே பங்கேற்றுள்ளன” என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த அமைப்பில் தொடர்ச்சியான ஷெல் நிறுவனங்கள், இரண்டு லைக்கா மொபைல் விற்பனையாளர்கள் மற்றும் பாரிஸ் லா சப்பல்லின் மறு விற்பனையாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது சட்டவிரோதமாக ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கக் கோரும் கட்டுமான நிறுவனங்களின் நலனுக்காக இயங்கியது.

“பணமோசடி குற்றச்சாட்டுகள் இரண்டு விற்பனையாளர்களின் செயல்பாடுகளைப் பற்றியது, அவர்கள் இந்த இணையான செயல்பாட்டைக் கண்டுபிடித்தவுடன் பணிநீக்கம் செய்யப்பட்டனர்,” என்று லைக்கா மொபைல் கூறியுள்ளது.

லைக்கா மொபை சேவிஸ் நிறுவனத்திற்கு 3 மில்லியன் யூரோக்கள் மற்றும் லைக்கா மொபைல் பிரான்ஸிற்கு 7 மில்லியன் யூரோக்கள் அபராதம் விதிக்கப்பட்டது.

டூலிக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 250,000 யூரோ அபராதமும் விதிக்கப்பட்டது. அவர் ஐந்து ஆண்டுகளுக்கு வணிகத்தை நிர்வகிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. குழுவின் மற்ற பிரிட்டிஷ் தலைவர் அன்றூ விடுவிக்கப்பட்டார்.

பிரான்ஸில் லைக்கா மொபைலின் பொது மேலாளர், அலைன் ஜோசிமெக் வழக்கின் இரு பகுதிகளிலும் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். இதில் அவர் பதினெட்டு மாதங்கள் மின்னணு வளையலின் கீழ் பணியாற்றவேண்டும், 120,000 யூரோக்கள் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் அவர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தொழிலை நடத்தவும் தடை விதிக்கப்பட்டது.

(அ)

# தனக்கு தானே தீ வைத்துக்கொண்டு பொலிஸாரை கட்டிப்பிடித்தவர் பலி!

மட்டக்களப்பு, ஒக். 30

போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் தனக்குத் தானே தீ வைத்துக்கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கட்டிப்பிடித்த சம்பவத்தில், காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை பகுதியில் வைத்து இந்த சம்பவம் இடம்பெற்றது.

போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் தனது குழந்தையை தாக்கிவிட்டு, தனது உடம்பில் பெற்றோரை ஊற்றிக்கொண்டு, தனக்குத்தானே தீ வைத்துக்கொண்டபோது அதனை தடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தீக்காயங்களுக்கு உள்ளானார்.

அதனையடுத்து, தீக்காயங்களுக்குள்ளான குறித்த நபரும் பொலிஸ் உத்தியோகத்தரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, தீ வைத்துக்கொண்ட குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 37 வயதானவர் என்றும் ஒரு பிள்ளையின் தந்தை எனவும் கூறப்படுகிறது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்ந்தும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# ஆற்றில் மிதந்த சடலம்!

கொழும்பு, ஒக். 30

ஓய்வுபெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மகனின் சடலம் ஒன்று வெல்லம்பிட்டிய கோட்டையில் உள்ள கறுப்புப் பாலத்தின் கீழ் களனி ஆற்றில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

தொம்பே திட்டப்பட்டறை பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகரான 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 22ஆம் திகதி கிரிதர அமனபெத்த பாலத்திற்கு அருகில் களனி ஆற்றில் குதித்து காணாமல் போனதாக தொம்பே பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்திருந்தது.

இறந்தவரின் சகோதரர் ஒருவர் வந்து கொலன்னாவ மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சடலத்தை அடையாளம் காட்டினார்.

வலது கையில் நூல் கட்டப்பட்டிருந்ததாலும், விரலில் விசேட அடையாளம் காணப்பட்டதாலும் சடலம் அடையாளம் காணப்பட்டது.

(அ)

# நிலையான பொருளாதார கொள்கை இலங்கை அரசிடம் அறவே இல்லை!

## தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 30

அரசிடம் நிலையான பொருளாதார கொள்கை இல்லை என தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ச.கீதன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மின்சார கட்டணங்கள் அதிகரிப்பு, நீர் வழங்கல் கட்டணங்கள் அதிகரிப்பு, வெளிநாட்டு உற்பத்திகள் இறக்குமதி வரி அதிகரிப்பு, உள்ளூர் உற்பத்திகள் ஏற்றுமதி ஊக்குவிப்பு இன்மை, விவசாயிகளின் பயிர் செய்கையில் ஸ்திரமின்மை, வாகன இற க்குமதிகள் என பல்வேறு பட்ட விடயங்களில் சீரான நிலைப்பாடு இல்லை.

மேலும், இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாட்டில் அரசு ஊழியர்கள்ளும் பொருளாதார நெருக்கடியில் சம்பள ஏற்றம் தொடர்பில் பல கண்டனங்கள் அல்லது கவன ஈர்ப்பு போராட்டங்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

நிலையான நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு சரியான அரசியல் நிலைப்பாட்டை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும்.

இல்லையேல் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீளாது மேலும் நாட்டு மக்களின் நிலை கவலைக்கிடமாக மாறும் - என்றார்.

(அ)

# போதையில் தனது வீட்டை எரித்துக்கொண்ட இளைஞர்!

மட்டக்களப்பு, ஒக். 30

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடியில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஒருவர் தனது சொந்த வீட்டை தானே தீ வைத்து எரித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக 27 வயது இளைஞன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீற்றர் போல் உத்தவிட்டார்.

வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் வீட்டிலிருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பராகி யுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

போதைவஸ்து பாவனையின் எதிரொலியே இச்சம்பவம் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் ஐஸ் மற்றும் போதைவஸ்துக்கு அடிமையானவர் என கைதான நபரின் தந்தை தெரிவித்தார். (அ)

# ஒன்லைன் முறைக்கு மாறும் உள்ளூராட்சி நிறுவனங்கள்

## ஜனவரி முதல் திட்டம் அமுல்



கொழும்பு, ஒக். 30

அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்காலத்தில் இணையத்தள வழியிலேயே மேற்கொள்ளப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்தார்.

பொது நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகள் எதிர்காலத்தில் இணையத்தள வழியிலேயே மேற்கொள்ளப்படுவதற்கான முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் கீழ் மக்கள் மதிப்பீட்டு வரி உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவுகளை திறம்பட செலுத்த முடியும்.

இந்த புதிய வேலைத்திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவுள்ளது - என்றார்.

இதேவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களின் கீழே இவற்றின் நிர்வாகம் தற்போது இடம் பெற்று வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

(அ)

# பொன்சேகாவின் பதவியை பறிக்க தயாராகிறார் சஜித்!

கொழும்பு, ஒக். 30

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை அக்கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கான ஆயத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

சரத் பொன்சேகாவை நீக்கிவிட்டு அந்த பதவிக்கு கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவரை நியமிக்க கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆலோசனை நடத்தியுள்ளார்.

சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படுவதால் அவர் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு கட்சியின் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினர் இந்த பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாகவும் கட்சியின் உள்ளக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக ஐக்கிய மக்கள் சக்திக்குள் பொன்சேகாவுக்கு எதிரான கருத்துக்கள் வலுப்பெற்று வருகின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து பல்வேறு ரகசிய நகர்வுகளில் சரத் பொன்சேகா ஈடுபட்டுள்ளதாலேயே கட்சிக்குள் பொன் சேகாவின் பதவியை பறிக்க வேண்டுமென்ற கருத்து வலுப் பெற்றுள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியுடன் பொன்சேகா நெருங்கிய தொடர்பை பேணி வருவதாக பொன்சேகாவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# பொதுஜன பெரமுன வழங்கும் ஆதரவை ஜனாதிபதி சாதாரணமாக கருதிவிட்டார்

## பொதுச்செயலர் சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 30

**பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் தனக்கு வழங்கிவரும் ஆதரவை ஜனாதிபதி மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொண்டுள்ளார். அதன் முக்கியத்துவத்தை அவர் கருத்தில் கொள்ளவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

**அவரது பேட்டியின் விவரம் வருமாறு:-**



கேள்வி - பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் என்ற அடிப்படையில் நீங்கள் சமீபத்திய அமைச்சரவை மாற்றம் குறித்து கரிசனை வெளியிட்டுள்ளீர்கள் - உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில் - சுகாதார அமைச்சரரை மாற்றியமை தொடர்பில் எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. ரமேஸ் பத்திரன ஒரு மருத்துவர் அவர் இன்னும் சிறப்பாக செயற்படுவார் என நான் தெரிவித்திருக்கின்றேன். நாங்கள் அவருக்கு பாராட்டை தெரிவித்துள்ளோம்.

பொதுஜன பெரமுனவுக்கு குறைந்தளவு அமைச்சுப் பொறுப்புகளே உள்ளன என்பதே எங்கள் கரிசனை. ஆனால் எங்கள் கட்சியை சேர்ந்த 100இற்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்றனர்.

பொதுஜனபெரமுன தனக்கு வழங்கியுள்ள பலத்தை ஜனாதிபதி கருத்தில் கொள்ளத் தவறியுள்ளார்.

கேள்வி - உங்கள் கட்சியின் கரிசனைகளை ஜனாதிபதியிடம் தெரிவித்தீர்களா?

பதில் - நான் ஞாயிற்றுக்கிழமை அவருடன் பேசினேன். ரமேஸ் பத்திரனவுக்கு சுகாதார அமைச்சுப் பதவியை வழங்குவது குறித்து எங்களுக்கு எந்த பிரச்னையுமில்லை என நான் அவரிடம் தெரிவித்தேன். அதேவேளை ரமேஸ் பத்திரன இதுவரை காலமும் வகித்த பதவியை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இல்லாவிட்டால் அது எங்களுக்கு பிரச்னையாகிவிடும். இதுவே எனது கரிசனை.

ஏனைய கட்சிகள் குறித்து அக்கறை காட்டப்படுகின்றது. பொதுஜன பெரமுன குறித்து அக்கறை காட்டப்படவில்லை என பொதுமக்களும் கருதுவார்கள்.

கேள்வி - அமைச்சரவை மாற்றம் குறித்து உங்கள் கட்சிக்கு முன்கூட்டியே தெரியுமா?

பதில் - எங்களுக்கு அமைச்சரவை மாற்றம் குறித்து தெரியும். இரண்டு கிழமைக்கு முன்னரே கெஹலிய ரம்புக்வெலவை பதவி விலகுமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார். ரம்புக்வெல அதற்கு இணங்கியிருந்தார்.

ரமேஸ் பத்திரனவை சுகாதார அமைச்சராக பதவி வகிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். ஆனால் அவர் அதனை நிராகரித்தார் - அதனால் அது தாமதமானது. அவரை மூன்று தடவைகள் கேட்டார். அவர் அதனை நிராகரித்தார்.

எனினும் இறுதியில் அவர் இணங்கினார். ஜனாதிபதி சீனா செல்லவேண்டியிருந்ததால் இந்த விடயம் தாமதமானது.

எனினும் பின்னர் பத்திரனவின் அமைச்சுப் பதவி மகிந்த அமரவீரவுக்கு வழங்கப்பட்டதாக நாங்கள் அறிந்தோம். அதுவே எங்கள் கரிசனைக்குரிய விடயம்.

கேள்வி - கட்சியின் கரிசனைகள் குறித்து ஜனாதிபதியின் பதில் என்ன?

பதில் - ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். ஆரம்பத்தில் நான் ஜனாதிபதியின் செயலாளருடன் பேசினேன். அவர் ஜனாதிபதியுடன் பேசினார். ஜனாதிபதி எங்கள் கரிசனைகளை ஏற்றுக்கொண்டார். எனினும், மறுநாள் காலை அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது.

கேள்வி - எனினும் தனது அமைச்சுப் பதவியின் கீழ் வரும் சில பொறுப்புகளை எடுத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சிக்கு வழங்கியுள்ளனர் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளாரே?

பதில் - எங்கள் கட்சியின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும் என்பது குறித்து எங்கள் மத்தியில் ஒருவகை புரிந்துணர்வு காணப்பட்டது.

நாங்கள் ஆரம்பத்தில் ஜனாதிபதியை கேட்டவேளை அவர் அனைத்து கட்சி கூட்டத்தின் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

கேள்வி - ஆகவே பொதுஜன பெரமுனவிற்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்பதுதான் உங்கள் கரிசனையா?

பதில் - விடயம் என்னவென்றால் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு 120 பேரின் ஆதரவு உள்ளது. இதில் 100 பேர் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள். ஆகவே நீங்கள் பொதுஜன பெரமுனவின் ஆதரவை மிகவும் சாதாரணமாக கருதியுள்ளீர்கள் என்பதே இங்கு விடயமாக உள்ளது.

கேள்வி - அமைச்சரவை மாற்றம் ஜனாதிபதியுடனான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா?

பதில் - அமைச்சரவை மாற்றம் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைவில்லை. மிகவும் கவலையடைந்துள்ளோம். (அ)

# பேராசிரியராக விஜயகுமாரன்!



யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதற்கான ஒப்புதலைப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன் தினம் சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி ஆர். விஜயகுமாரனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்தவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் நிதி முகாமைத்தவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (அ-2)

# 3 தேர்தல் திருத்தச் சட்டமூலங்களும் அடுத்த வாரம் விவாதத்துக்கு வரும்

கொழும்பு, ஒக். 30

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம், பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம், மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் ஆகிய மூன்று தேர்தல் திருத்தச் சட்டமூலங்களும் எதிர்வரும் பாராளுமன்ற வாரத்தில் விவாதிக்கப்பட உள்ளன.

எதிர்வரும் வாரம் நவம்பர் 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை குறித்த விவாதம் நடைபெறவுள்ளதுடன், இது தொடர்பான நிகழ்ச்சி நிரல் கடந்த 19ஆம் திகதி கூடிய பாராளுமன்ற விவகாரக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம், எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் பாராளுமன்ற வாரத்தின் இறுதி நாளான 10ஆம் திகதி பரிசீலிக்கப்படவுள்ளதுடன், பாராளுமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதமும் மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதமும் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அல்லது வரவு செலவுத் திட்ட உரையை நவம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரக் குழு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், அதன் இரண்டாம் வாசிப்புக்கான விவாதம் நவம்பர் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு நடைபெறவுள்ளதுடன், நவம்பர் 21ஆம் திகதி மாலை 06.00 மணிக்கு வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் அல்லது குழுவின் விவாதம் நவம்பர் 22ஆம் திகதி முதல் டிசம்பர் 13ஆம் திகதி வரை 19 நாட்களுக்கு நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மரியன்னை சிற்றாலயத்தில் பெருநாள்










யாழ்ப்பாணம், ஒக். 30

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் திருப்பலி கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

கலாசாலையின் கிறிஸ்தவ மன்ற ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மறைக் கோட்ட முதல்வரும் யாழ்.பேராலய பங்குத் தந்தையுமாகிய அருட்பணி ஜே.ஜே.மௌலிஸ் அடிகளாரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கோப்பாய் பங்குத்தந்தை எம்.எல்.மொன்பேட் அடிகள் பெருநாள் திருப்பலியில் கலந்து ஆசி வழங்கினார். கலாசாலை அதிபர் ச.லலீசன் திருப்பலி நிறைவுரை ஆற்றினார். (அ)

## ஆனைக்கோட்டை....

செலுத்தினார். இதன்போது மின்சாரம் அவர் மீது பாய்ந்தது.

இந்நிலையில் அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசார ணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது. (அ)

## பட்ஜெட்டை....

நிதி ஒதுக்கீட்டை தோற்கடிக்க மொட்டு கட்சி திட்டமிட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கையில் மொட்டு கட்சி இறங்கினால், பட்ஜெட் நிறைவேற்றப்பட்ட பின்னர் பாராளுமன் றம் கலைக்கப்படலாம் என தெரியவரு கின்றது. (அ)

## கொழும்பு....

கியான் ஷின், ஷி யான் 6 கப்பல் இந்தி யப் பெருங்கடலில் அறிவியல் ஆய்வு களை மேற்கொண்டு வருவதாக குளோ பல் டைம்ஸிடம் தெரிவித்துள்ளார்.

ஆனால், சில இந்திய ஊடகங்கள் சீனாவின் சர்வதேசப் புகழைக் கெடுக்க வும், சீனாவைக் கோபப்படுத்தவும் இராணுவ நடவடிக்கைகளுடன் தனது நாட்டின் வெளியுறவுக் கொள்கையை வேண்டுமென்றே தொடர்புபடுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆராய்ச்சிக் கப்பல் தொடர்பான இந்த சித்தாந்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் பரஸ்பர நம்பிக் கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவ தாகவும், ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பரஸ்பர நம்பிக்கையை மீட்டெடுக்க நேர்மறையான முயற்சிகளை எடுக்கு மாறு அவர் இந்தியாவைக் கேட்டுக் கொள்கிறார்.

ஷி யான் 6 கப்பலின் செயற்பாடுகள் சர்வதேச சட்டம் மற்றும் இலங்கையின் சட்டங்களுக்கு அமைவாகவே அமைந் துள்ளதாக தென் சீனக் கடல் ஆய்வுக் கான தேசிய நிறுவனத்தின் உலக கடல் சார் ஆராய்ச்சி பணிப்பாளர் சின் ஷின் மியாவ் குளோபல் டைம்ஸிடம் தெரி வித்துள்ளார்.

சீனக் கப்பல்கள் இந்தியப் பெருங் கடலுக்குள் நுழையும் போதெல்லாம், அவை வணிகக் கப்பல்களாக இருந்தா லும் சரி, மீன்பிடிக் கப்பலாக இருந்தா லும் சரி, அப்பகுதிக்கு அச்சுறுத்தலாகக் கருதி சீனாவுக்கு எதிராக இந்தியா அறிக்கைகளை வெளியிட்டு வருவதாக குளோபல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் நேற்று முன்தினம் புறப்படவிருந்த நிலையில், மேலும் இரண்டு நாட்களுக்கு இலங்கையில் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடவுள் ளதாக வெளிவிவகார அமைச்சு அறி வித்திருந்தது.

இதனிடையே, ஷி யான 6 கப்பலைக் கொண்டு ஆய்வு நடத்த நாரா நிறுவனம் பாதுகாப்பு அமைச்சகத்திடம் அனுமதி பெற்றுள்ளது.

அதன்படி, நேற்று ஷி யான் 6 கப்பலு டன் நாரா நிறுவனத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் மற்றும் இரண்டு கடற்ப டை அதிகாரிகளைக் கொண்ட குழு வொன்று ஆராய்ச்சியில் ஈடுபட்டுள் ளது.

இந்தியாவின் விமர்சனத்தையும் பொருட்படுத்தாமல், சீன ஆய்வுக் கப் பல் முன்பு திட்டமிட்டபடி 25ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

கடல் பிராந்தியத்தில் தங்கியிருப்ப தற்கான அனுமதியுடன் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஷி யான் 6 இலங்கை யில் நிறுத்தப்பட்டிருக்கும் என தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ)

## யாழில்...

மூன்று பெண்களும் ஒரு குழந்தையும் இதனால் காயமடைந்துள்ளனர்.

விபத்து சம்பவம் தொடர்பாக யாழ்ப் பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## அரசுக்கு....

அடிக்காதே அடிக்காதே ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, குறைத்திடு குறைத்திடு பொருட்களின் விலைகளை குறைத்திடு என கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வட்டுக்கோட்டை மற்றும் தீவக தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவம், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், சமூகமட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## மன்னார்....

குற்றம் சுமத்தியுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழுவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் விசேட ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் பிரதிநிதி ஜேம்ஸ் ஜேசுதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

இதன் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கருத்து தெரிவிக் கையில்-

மன்னாரின் மின்சார தேவைக்காக சோலர் பனல்களை நிறுவுவதாக கூறி, குறைந்த விலையில் குடியிருப்பாளர்க ளின் காணிகளை நன்கு அறியப்பட்ட உள்ளூர்வாசிகள் வாங்குகின்றனர்.

எவ்வாறாயினும், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனமான டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட்டிற்கு தாது மணல் அகழ்வுக் காக விற்பதே உண்மையான காரணம்.

சுரங்கத் தொழில் தொடங்கினால், வரலாற்று மற்றும் சூழலியல் முக்கியத்து வம் வாய்ந்த மன்னார் தீவின் அழிவை இது உணர்த்தும் என்பதை உள்ளூர் வாசிகள் உணர்ந்து வருகின்றனர்.

40 அடி வரையிலான சுரங்கங்கள் கணிசமான கடல் நீர் ஊடுருவி நிலத்தடி நீரை மாசுபடுத்தும், இது மக்கள், விலங் குகள், பறவைகள் மற்றும் விவசாயத் திற்கு பொருந்தாது.

டைட்டானியம் சாண்ட்ஸ் லிமி டெட் மன்னாரின் கரையோர பகுதி களில் அகழ்வாராய்ச்சி செய்ய விரும்ப வில்லை என அவுஸ்திரேலிய பங்குச் சந்தைக்கு பகிரங்கமாக அறிவித்தது.

இப்படி இருந்தால், இந்தப் பகுதிக ளில் ஏன் நிலம் வாங்குகிறார்கள்? இலங் கையின் சட்டங்களில் அண்மைய மாற் றங்கள் காணி உரிமையாளர்கள் தங்களு டைய சொந்த சொத்துக்களில் அகழ்வா ராய்ச்சி செய்ய அனுமதிப்பதும் இதற்கு முன்னர் ஆய்வு உரிமம் உள்ளவர்கள் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கடந்த ஆண்டு டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் தாது மணல் ஆய் வில் ஏழு ஆண்டுகள் நிறைவு பெற்றது. பின்னர் சுரங்க விண்ணப்பத்தை சமர்ப் பிக்க சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் அழைக்கப்பட்டது.

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் முன்னர் இதே ஆய்வு உரிமங்கள் ரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியாவின் டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் சுரங்க நிறுவனம் மற்றும் அவற்றின் உள்ளூர் துணை நிறுவனங்களான கில்சித் எக்ஸ்ப்ளோ ரேஷன், ஹேமர்ஸ்மித் சிலோன், சுப்ரீம் சொல்யூஷன், சனூர் மினரல்ஸ், ஒரியன் மினரல்ஸ் ஆகியவற்றின் பொய்கள் மற் றும் ஊழல்களின் நீண்ட பட்டியலில் ‘சோலர் பனல்’ - என்றனர். (அ)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 14 பேரையும் நவம்பர் 8 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தர விட்டார்.

நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இரண்டு படகையும் அதிலிருந்த 14 மீன வர்க ளையும் நேற்றுமுன்தினம் கைது செய்த னர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை



மயிலிட்டி அழைத்து வந்த கடற்படையி னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை திணைக்களத்தினரிடம் ஒப்ப டைத்தனர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட மீனவர்களை நவம்பர் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு ஊர்காவற்றுறை நீதவான் கஜநிதி பாலன் உத்தரவிட்டார். (அ-2)

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள 48 குற்றவாளிகள்!

கொழும்பு, ஒக். 30

வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் 48 குற்றவாளிகளில் 30 பேர் நேரடியாகவும், மறை முகமாகவும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட் டுள்ளதாக கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

புலனாய்வு அமைப்புகள் மேற் கொண்ட தீவிர விசாரணைகளில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பிரதானமாக ஐந்து பேர் இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டு வருவதில் நேரடியாக ஈடுபட் டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இந்தக் குழு தொடர்பில் சார்க் நாடுகளின் இணக்கப் பாட்டின் அடிப்படையில் இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. (அ)

## தலையில்....

வீட்டில் இருந்த போது கடந்த 21ஆம் திகதி காலை 5 மணியளவில் தலையில் விறைப்பு ஏற்பட்டதையடுத்து மயங்கி யுள்ளார்.

இதையடுத்து யாழ் போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

குறித்த இறப்பு தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் விசாரணைகளை மேற்கொண் டார். இதையடுத்து பிரேதத்தை உடற் கூற்று பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ)

## வயிற்றுக்....

கடந்த 25ஆம் திகதி இரவு வயிற்றுக் குற்று ஏற்பட்டதை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந் தார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலை யில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

குறித்த இறப்பு தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் விசாரணைகளை மேற்கொண் டார். இதையடுத்து பிரதேச பரிசோத னைக்கு பின்னர் சடலம் உறவினர் களிடம் கையளிக்கப்பட்டது. (அ)

## அரச நிறுவனங்களுக்கு....

அமைச்சர் தெரிவித்தார்.

வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத் தப்படும் எழுமடுவ மற்றும் மஸ்மடுவ காணிகளின் உரிமை கொழும்பு மாநகர சபைக்கே இருந்தது.

ஆனால் வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இரண்டு காணிகளும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 இல் தமது நிறுவ னத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டது. அது நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 50 இன் படியாகும்.

இதற்கு எதிராக கொழும்பு மாநகர சபை சட்ட நடவடிக்கை எடுத்திருந்தது.

அங்கு, இரண்டு நிறுவனங்களும் அரசு நிறுவனங்கள் என்பதால், சம்பந்தப் பட்ட பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என, நீதி மன்றம் அறிவுறுத்தியிருந்தது. குறித்த வீடமைப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்குமாறும் சீன அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது.

குறித்த் பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் தீர்த்து வைப்பதற்காக பத்தரமுல்லை, செத்சிரிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க அவர்களின் பங்களிப்புடன் கலந்து ரையாடல் இடம்பெற்றது.

அரச நிறுவனங்களுக்கு இடை யிலான முரண்பாடுகள் காரணமாக அபிவிருத்தி திட்டங்கள் மிகவும் தாமதமாகி வருவதாக அமைச்சர் பிர சன்ன ரணதுங்க அங்கு குறிப்பிட்டார். இவ்வாறான கருத்து முரண்பாடுகளி னால் சில சமயங்களில் அபிவிருத்தி திட்டங்கள் நாட்டுக்கு இழக்கப்படுவ தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அப்போது அரசியல் அதிகாரத்தின் மீதும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படு கிறது.

இவ்வாறான செயற்பாடுகள் நாட் டுக்கும் மக்களுக்கும் பெரும் அநீதி யாகும் என அமைச்சர் பிரசன்ன ரண துங்க தெரிவித்துள்ளார். அரச நிறுவ னங்கள் பொதுமக்களுக்காக செயல்படு கின்றன. எனவே, சட்டங்கள், சட்ட ளைகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் சிக்கிக் கொள்ளாமல் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அரச நிறுவ னங்கள் செயற்பட வேண்டுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத் தினார்.

சீன அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் 1996 வீடுகள் கட்டப் படும். அதற்காக சீன மக்கள் குடியரசு 552 மில்லியன் யுவான் நிதி உதவி வழங்க உள்ளது. கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான மஸ்மடுவ மற்றும் எழுமடுவ காணிகளில் சுமார் 500 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. காணியின் உரிமை தொடர்பான பிரச்சினைகள் காரணமாக நகர அபிவி ருத்தி அதிகார சபைக்கும் கொழும்பு மாநகர சபைக்கும் இடையில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் கைவினை கலைஞர்க ளுக்கு 1996 வீடுகளில் 108 வீடுகள் ஒதுக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். கொட் டாவ பழத்துருவத்த பகுதியில் வீடு நிர்மாணிக்கப்பட உள்ளது.

நிர்மாணிக்கப்படும் 1996 வீடுகளில் இந்நாட்டின் கலைஞர்களுக்கு 108 வீடு கள் ஒதுக்கப்படும் என அமைச்சர் பிர சன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# சம்பந்தனுடன் தொலைபேசியில் பேசினார் மாவை சேனாதிராசா

## சுமந்திரனின் கருத்து தொடர்பிலும் கவனம்

கொழும்பு, ஒக். 30

**இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் இடையில் தொலைபேசி உரையாடலொன்று நடைபெற்றுள்ளது.**

இந்த உரையாடலின்போது, தொலைக்காட்சி நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், முதுமை நிலை மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யவேண்டுமென பகிரங்கமாகத் தெரிவித்த கருத்து தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த தொலைபேசி உரையாடல் பற்றி மாவை சேனாதிராசா தெரிவிக்கையில், சம்பந்தன் தொலைபேசி மூலமாக என்னுடன் உரையாடினார். அதன்போது சுமந்திரன் வெளியிட்ட கருத்து தொடர்பில் கருத்துக்களை பரிமாறியிருந்தார்.

எனினும், தன்னை விரைவில் நேரில் வந்து சந்திக்குமாறு கோரியுள்ளார். அதற்கமைவாக அவருடன் விரிவானதொரு கலந்துரையாடலை நடத்தவுள்ளேன். அதன் பின்னரேயே குறித்த விடயம் சம்பந்தமாக உத்தியோகபூர்வமான அறிவிப்பை விடுக்கவுள்ளேன்-என்றார். (அ)

# 37 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கை கடல் பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இராமேஸ்வரத்தை சேர்ந்த 5 இழுவைப்படகுகளுடன், 37 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில், கடற்படையினர் நேற்று முன் தினம் மாலையும், நேற்று அதிகாலையும் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் மாலை தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையிலான கடற்பரப்பில் 3 படகுகளுடன் 23 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக்கு அருகில் மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் 2 இழுவைப் படகுகளுடன் வடக்கு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்கள் மற்றும் 5 மீன்பிடி இழுவை படகுகள் தலைமன்னார் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு, தலைமன்னார் மற்றும் யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகர்களிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# தமிழரசுக் கட்சியின் மத்திய குழு 5ஆம் திகதி வவுனியாவில் கூடும்

## டிசெம்பரில் தேசிய மாநாடு

யாழ்ப்பாணம், ஒக். 30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி வவுனியாவில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெறும் குறித்த கூட்டத்தில் கட்சியின் வருடாந்த மாநாட்டை நடத்துவதற்கான திகதி தீர்மானிக்கப்படும் என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தனை பதவி விலகுமாறு குறிப்பிட்ட கருத்துகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கூட்டத்தின்போது, இலங்கை தமிழரசுக்கட்சி 1949 டிசெம்பர் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதன் 74ஆவது வருட பூர்த்தி எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரவுள்ளமையால் குறித்த தினத்தில் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான முன்மொழிவைச் செய்வதற்கு சில உறுப்பினர்கள் முஸ்தீபு செய்யவுள்ளனர்.

அதேநேரம், தற்போது வரையில், யாழப்பாணம், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள தமிழரசுக்கட்சியின் மூலக்கிளைகளை மறுசீரமைக்கும் பணிகள் நிறைவுக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அரச சேவையாளர்கள் சங்கங்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம்!

கொழும்பு, ஒக். 30

அரச மற்றும் மாகாண அரச சேவையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு நாடளாவிய ரீதியில் இன்று திங்கள் கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளது.

அடுத்த வருடத்துக்கான பட்ஜெட்டில் 20 ஆயிரம் ரூபாய் மேலதிக கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிப்பை கோரி இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறித்த தொழிற்சங்களின் கூட்டமைப்பின் இணைப்பாளர் தம்மிக்க முணசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாண அரசாங்க சேவையாளர்கள் உள்ளிட்ட பலர் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் இணையவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கைக்கும் இந்தியாவுக்கு இடையில் விரிசல் ஏற்படுத்துவதே சீனாவின் திட்டம்

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 30

ஆசியாவில் சீனா தனது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காகவே இலங்கையில் ஆதிக்கத்தை அதிகரித்துக் கொண்டு இருப்பதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

சீன ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 இன் வருகை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியா தமிழர்களை எதிரியாகவும் சிங்களவர்களை நண்பனாகவும் கொண்டு செயற்படுவதுபோல இலங்கை தமிழர்களையும் இந்தியாவையும் எதிரியாகவும் சீனாவை நண்பனாகவும் கொண்டு செயற்படுகிறது.

இந்த நிலையில், இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே



சீனா செயற்பட்டு வருகிறது.

சீனாவின் செயற்பாடுகளை இந்தியா தெளிவாக புரிந்துக் கொள்ளாவிடின் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும்-என்றார். (அ)

# கல்வியமைச்சருடன் பேசும் இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, ஒக். 30

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் கலந்துரையாடலொன்றை முன்னெடுக்கவுள்ளது.

குறித்த கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினூடாக சம்பளப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான யோசனையொன்று இதன்போது சமர்ப்பிக்கப்படும் என்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் கூறினார். (அ)

# முல்லைத்தீவில் பெரிய தந்தையை அடித்துக் கொன்ற படைச் சிப்பாய்!

## பொலிஸாரால் அவர் கைது

முல்லைத்தீவு, ஒக். 30

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பில் தனது பெரியப்பாவை அடித்துக் கொன்ற இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயில் குஞ்சன் குடியிருப்பில் நேற்று முன் தினம் மாலை இந்த சம்பவம் நடந்தது.

சம்பவம் நடந்தபோது இருவரும் மதுபோதையில் இருந்துள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞன், இராணுவத்தில் பணியாற்றுகிறார்.

குறித்த சம்பவத்தில் தம்பிப்பிள்ளை மார்க்கண்டு (வயது 71) கைவேலி பகுதியை சேர்ந்தவரே உயிரிழந்துள்ளார்.

இரு குடும்பத்துக்குமிடையில் சில காலமாக பகை நிலவி வந்துள்ளது. இந்த நிலையில் நேற்று முன் தினம் மாலை, இளைஞன் மதுபோதையில் பெரியப்பாவை தாக்கியதாக கூறப்படுகிறது. இதையடுத்து, சற்று நேரத்தின் பின் இளைஞனின் வீடு தேடிச் சென்ற பெரியப்பா தகராறில் ஈடுபட்டுள்ளார். இருவரும் மாறிமாறித் தாக்கியுள்ளனர்.

இளைஞன் மண்வெட்டிப் பிடியினால் பெரியப்பாவை தாக்கியதில் அவர் தலையில் படுகாயமடைந்தார். உடனடியாக புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இராணுவத்தில் பணியாற்றும் இளைஞனும், பெரியப்பாவின் தாக்குதலில் காயமடைந்துள்ளார். அவர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சீனா - பூடான் நெருக்கத்தால் எல்லையில் இந்தியாவை அச்சுறுத்தும் புதிய பிரச்னை

பூடான் வெளியுறவு அமைச்சரின் சீனப் பயணத்தை தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேயும் பல வருடங்களாக இருந்துவரும் எல்லைப் பிரச்னை முடிவுக்கு வரலாம் என ஊகங்கள் எழுந்து வருகின்றன.

மேலும், சீனவுக்கும் பூடானிற்கும் இடையே விரைவில் தூதரக உறவுகள் (Diplomatic Relations) ஏற்படுவதற்கான அறிகுறிகளும் தெரிகின்றன. இந்த இரண்டு விஷயங்களும் இந்தியாவிற்கு மேலும் தலைவலியைதான் தரப்போகின்றன.

சீனாவிற்கும் பூடானிற்கும் இடையேயான எல்லைப் பிரச்சனையில் சமரசம் ஏதும் ஏற்பட்டால் அது நேரடியாக டோக்லாம் எல்லையில் பாதிப்பை ஏற்படுத்தும்.



2017ம் ஆண்டு இந்திய மற்றும் சீன ராணுவங்களுக்கு இடையே 73 நாட்களுக்கு மோதல் நிலவியது. பூடானால் தங்களது பகுதி என சொல்லப்படும் இடத்தில் சீனா சாலை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதால் இந்த மோதல் ஏற்பட்டது.

தற்போது பூடான் உடனான எல்லை பிரச்சனையில் சீனா தீர்வை எட்டிவிட்டால் இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்துடனும் சீனா நட்புறவில் உள்ளது என்ற சூழல் உருவாகிவிடும்.

சமீபத்தில், சீனா தனது அண்டை நாடுகள் தொடர்பாக வெளியுறவு கொள்கை குறிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதில், 12 அண்டை நாடுகளோடு தனக்கிருந்த தரை வழி எல்லைப் பிரச்சனையை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக் கொண்டதாக சீனா தெரிவித்தது. மேலும், 9 நாடுகளோடு நட்புறவில் இருப்பதற்கான ஒப்பந்தமும் கையெழுத்திட்டுள்ளதாக சீனா தெரிவித்தது.

அந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் பெயர் இல்லை.

**சீனா - பூடான் இடையே அதிகமாகும் நெருக்கம்**

கிழக்கு லடாக்கில் உள்ள இந்தியா-சீனாவின் எல்லைப் பகுதியில் இரு நாடுகளுக்கும் நடந்துவரும் மோதல் இன்னும் தொடர்கிறது.

இந்த நிலையில், சீனாவிற்கும் பூடானிற்கும் இடையே தூதரக உறவுகள் ஏற்பட்டால் கண்டிப்பாக அதை இந்தியா தீவிரமாக கண்காணிக்கும்.

தனது நலனுக்காக இராணுவ மற்றும் பொருளாதார பலத்தை பயன்படுத்தி சிறிய நாடுகளை கட்டுப்படுத்துவதாக சீனா மீது அடிக்கடி குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

பூடானிற்கும் சீனாவிற்கும் இடையே 25வது கட்ட எல்லைப் பேச்சுவார்த்தை பெய்ஜிங்கில் அக்டோபர் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு சீனா தரப்பில் அதன் வெளியுறவு இணையமைச்சர் சுன் வீடாங் மற்றும் பூடானின் வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் தண்டி டோர்ஜி தலைமை தாங்கினர். இந்த பேச்சுவார்த்தையில் இரு நாட்டு பிரதிநிதிகளும் பூடான் - சீனா எல்லையை தீர்மானிப்பது குறித்த கூட்டுறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

அக்டோபர் 23ம் தேதி தண்டி டோர்ஜியை சந்தித்த பின் சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி பேசுகையில் சீனாவும் பூடானும் மலைகளாலும், நதிகளாலும் ஆழமான கலாச்சார நட்புறவால் பிணைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். மேலும், இரு நாடுகளுக்கும் இடையேயான இராஜ தந்திர உறவுகள் பூடானின் நீண்டகால திட்டங்களுக்கு உதவியாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

சீனாவின் உதவிக்கும் வலிமையான ஆதரவிற்கும் நன்றி தெரிவித்த பூடானின் வெளியுறவுத்துறை அமைச்சர் தண்டி டோர்ஜி, சீனா-பூடான் இடையே பாரம்பரியமான நட்பு இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், "சீனாவின் ஒரு பகுதிதான் தாய்வான் என்பதை வலியுறுத்தும் 'ஒரே சீனா' கொள்கையோடு நாங்கள் முற்றிலும் உடன்படுகிறோம். சீனாவோடு விரைவாக இராஜ தந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கு தயாராக இருக்கிறோம்" எனத் தெரிவித்தார்.



**சீனா - பூடான் எல்லைப் பிரச்னையின் பின்னணி என்ன?**

சீனா-பூடான் எல்லையானது 400 கிலோமீட்டருக்கும் அதிகமானது. இரு நாடுகளும் தங்களது எல்லைப் பிரச்சனையில் தீர்வு காண 1984ல் இருந்து தற்போது வரை 25 கட்டங்களாக பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

சீனாவிற்கும் பூடானுக்கும் இடையே பெரும் சர்ச்சைக்குரியதாக இருக்கும் இரண்டு பகுதிகளில் ஒன்று இந்தியா-சீனா-பூடான் முச்சந்திக்கு அருகில் உள்ள 269 சதுர கிலோமீட்டரிலுள்ள பகுதி, மற்றொன்று பூடானின் வடக்கே 495 சதுர கிலோமீட்டரில் உள்ள ஜகர்லுங் மற்றும் பாசம்லுங் பள்ளத்தாக்குகள்.



495 சதுர கிமீ பகுதியை பூடானிடம் விட்டுக்கொடுத்துவிட்டு 269 சதுர கிமீ பகுதியை எடுத்துக்கொள்ள சீனா விரும்புகிறது.

பூடானின் மேற்கு எல்லையில் சீனா சொந்தம் கொண்டாடும் இரண்டு பகுதிகளில் ஒன்று சும்பி பள்ளத்தாக்கு. இதற்கு அருகில்தான் உள்ள டோக்லாம் பகுதியில்தான் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் மோதல் ஏற்பட்டது.

இந்த சும்பி பள்ளத்தாக்கை தான் வைத்துக்கொண்டு பூடானிற்கு அதைவிட பெரிய ஒரு பகுதியை வழங்க சீனா தயாராக உள்ளது.



இதில் இந்தியாவிற்கு என்ன பிரச்சனையென்றால், பூடானிடம் இருந்து சீனா கேட்கும் அந்தப்பகுதி இந்தியாவின் சிலிகுரி பாதை அல்லது 'சிக்கன்ஸ் நெக்' எனப்படும் பகுதிக்கு அருகே உள்ளது. இந்த சிலிகுரி பாதை வடகிழக்கு மாநிலங்களுக்கு செல்வதற்கு முக்கியமான வழித்தடமாக உள்ளது.

சிலிகுரி பாதைக்கு சீனா வந்துவிட்டால் அது வடகிழக்கு மாநிலங்களுக்கான தொடர்பிற்கு பெரும் ஆபத்தாகவும் இந்தியா வியூகம் அமைப்பதற்கு பெரும் சவாலாகவும் அமையும்.

சில வாரங்களுக்கு முன்பு தி இந்து ஆங்கில நாளிதழுக்கு பேசிய பூடான் பிரதமர் லோடேய் ஷெரிங், "பூடான் எடுக்கக்கூடிய முடிவால் சீனாவும் இந்தியாவும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை உறுதி செய்வோம். சீனா உடனான பிரச்னையை முடித்துவிட்டு இந்தியாவுடன் புதிய பிரச்னையை ஆரம்பிக்க பூடான் விரும்பவில்லை" எனத் தெரிவித்தார்.


சீனா - பூடான் நெருக்கத்தால் எல்லையில் இந்தியாவிற்கு புதிய பிரச்னை

புது தில்லியில் உள்ள அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷனின் ஆய்வுகள் மற்றும் வெளியுறவுக் கொள்கைத் துறையின் துணைத் தலைவராக உள்ள பேராசிரியர் ஹர்ஷ் வி பந்த் கூறுகையில், "டோக்லாம் எல்லையில் (Tri-junction) ஏற்பட்ட நெருக்கடியை நாம் பார்த்தோம். அந்தப் பிரச்னைக்கான தீர்வு முத்தரப்பு வழியில் செய்யப்பட வேண்டும் என்பதே பூடானின் நிலைப்பாடு" எனத் தெரிவித்தார்.

ராகேவேந்திர ராவ்

பூடானிற்கு தனது நலன்களைப் பாதுகாக்க எந்தவொரு நாட்டுடனும் பேச்சுவார்த்தை நடத்த முழு உரிமை உள்ளது என்றும், அதை பகிரங்கமாக எதிர்க்க இந்தியா விரும்பாது என்றும் ஹர்ஷ் பந்த் கூறுகிறார்.

மேலும், "சீனாவிற்கும் பூடானிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் இந்தியாவிற்கு சொந்தமான பகுதிகளின் ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்துமா என்பதுதான் இந்தியாவின் கவலையாக இருக்கும்." என அவர் தெரிவித்தார்.



பூடானின் பார்வையில் இருந்து பார்த்தால், இந்தியா-சீனா சர்ச்சை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை பூடான் பார்த்து வருகிறது, எனவே இந்தியா-சீனா மோதல்கள் மேலும் தீவிரமடைவதற்குள் இந்தப் பிரச்னையை பூடான் தீர்க்க முயற்சிப்பதாக பேராசிரியர் பந்த் கூறுகிறார்.

இந்தியா-சீனா இடையேயான எல்லைப்பிரச்சனையில் மேலும் சிக்கிக்கொள்ள பூடான் விரும்பவில்லை என்றும் இந்தியா-சீனா இடையேயான எல்லைப்பிரச்னை பெரிதாவதற்கு முன்பே தங்களுக்கு சீனா உடன் இருக்கும் எல்லைப் பிரச்னையை முடித்துக்கொள்ள பூடான் விரும்புவதாகவும் பந்த் கூறுகிறார்.

**முச்சந்தி பிரச்னைக்கு முக்கோண தீர்வு**

இந்திய ராணுவத்தின் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எஸ்பி அஸ்தானா, பாதுகாப்பு மற்றும் வியூக விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவர்.

"பூடானின் வெளியுறவு அமைச்சரின் சீன பயணத்தை தொடர்ந்து சீனா-பூடான் இடையேயான எல்லைப் பிரச்னைக்கு தீர்வு கிடைத்து விடும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை" என அஸ்தான தெரிவித்தார்.

ஏனென்றால், இந்தியாவும் சீனாவும் கூட அவ்வப்போது தங்களது எல்லைப் பிரச்னைகளை தீர்க்க பேச்சுவார்த்தை நடத்துவார்கள் ஆனால் அதன் பின்பு பிரச்னை தொடர்ந்துகொண்டேதான் இருக்கும். எனவே சீனா-பூடான் விவகாரத்தில் பிரச்னை தீர்ந்துவிட்டதாக நாம் கூற முடியாது என அஸ்தானா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "சீனாவும் பூடானும் வெளியிட்ட கூட்டறிக்கையில் எல்லைப்பகுதியில் பிரச்னைக்குரிய நிலத்தை சீனாவிற்கு வழங்க பூடான் ஒப்புக்கொண்டதாக குறிப்பிடப்படவில்லை. சீனா அந்த கூட்டறிக்கையை தங்களுக்கு ஏற்ற மாதிரி திரித்துக் கொண்டது. 25 கட்டங்களாக நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு தற்போதுதான் சீனாவும் பூடானும் எல்லையை தீர்மானிப்பதை நெருங்கியுள்ளார்கள்" என அவர் தெரிவித்தார்.

அஸ்தானா கூறுகையில், கடந்த காலத்தில் இந்த முச்சந்தி விவகாரத்தை மூன்று நாடுகளும் சேர்ந்துதான் தீர்க்க வேண்டும் என்பதுதான் பூடானின் நிலைப்பாடு என்றும் இப்போதும் இந்தியாவை பகைத்துக்கொண்டு பூடான் எந்த முடிவையும் எடுக்காது என்றும் தெரிவித்தார்.

**பூடானோடு இராஜ தந்திர உறவு வைத்துக்கொள்ள சீனா விரும்புவது ஏன்?**

தாய்வான் போல் அல்லாமல் சீனாவின் எந்த விதமான இருப்பும் இல்லாத நாடு பூடான் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தவிர, பூடானுக்கும் இந்தியாவுடன் சிறப்பான உறவு உள்ளது. எனவே பூடானுடன் சீனா தூதரக உறவை ஏற்படுத்திக் கொண்டால், அது சீனாவிற்கான ஒரு விளம்பரமாக இருக்கும்.

பேராசிரியர் பந்த் கூறுகையில், ஐநா பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்புநாடுகள் எதனுடனும் பூடானிற்கு தூதரக உறவுகள் இல்லை. இந்த நிலையில் சீனாவோடு பூடான் தூதரக உறவு ஏற்படுத்திக்கொண்டால் அது நிச்சயம் இந்தியாவை பாதிக்கும். ஆனால், அந்த அளவிற்கு பூடான் செல்லாது.

(16ம் பக்கம் பார்க்க)

# காஸா மீது இஸ்ரேல் நடத்தும் மூன்று கட்ட தாக்குதல்கள் என்னென்ன?

காஸாவில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியுள்ள நிலையில், இந்தப் போர் நீண்ட நெடியதாகவும் கடினமானதாகவும் இருக்கும் என இஸ்ரேல் பிரதமர் பென்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

தரைவழி தாக்குதலை காஸாவின் வடக்குப் பகுதியில் இஸ்ரேல் நடத்தப் போவதாக கடந்த பத்து நாட்களுக்கு முன்பே அறிவித்திருந்தது. தரைப்படைகள் இரவோடு இரவாக காஸாவிற்குள் நுழைந்து ஹமாசுக்கு எதிராக தாக்குதலை தீவிரப்படுத்தும் என்று இஸ்ரேலின் ராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகரி வெள்ளிக்கிழமை இரவு பத்திரிகையாளர் சந்திப்பில் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்தார்.



இதனால் காஸா நகரம் உள்ளிட்ட வடக்குப் பகுதியில் இருக்கும் மக்கள் தெற்கு நோக்கி நகர இஸ்ரேல் எச்சரித்தது. இந்நிலையில் காஸாவின் வடக்குப் பகுதியில் தற்போது தீவிரமான தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியுள்ளது.

**இஸ்ரேலின் மூன்று கட்ட தாக்குதல்கள் என்ன?**

இது காஸாவுக்கு எதிரான போரின் இரண்டாவது கட்டம் என்றும் இது கடினமானதாக இருக்கும் என்றும் இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

கடந்த வாரம் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட், காஸாவுக்கு எதிரான போர் மூன்று கட்டங்களாக நடைபெறும் எனக் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த மூன்று கட்டங்கள்,

முதல் கட்டத்தில் ஹமாஸின் கட்டமைப்புகள் தகர்க்கப்படும்.

இரண்டாம் கட்டத்தில் ஹமாஸ் ஒழிக்கப்படும்.

மூன்றாவது கட்டத்தில் காஸா மக்களின் உயிருக்கு இஸ்ரேல் பொறுப்பல்ல என்ற நிலை உருவாகி இஸ்ரேல் குடிமக்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**'தீய சக்திகளின் கோட்டைக்குள் இஸ்ரேல் நுழைந்துள்ளது'**

தொலைக்காட்சி மூலம் உரை நிகழ்த்திய பிரதமர் நெதன்யாகு, காஸா பகுதி முழுவதும் இஸ்ரேலின் படைத் தளபதிகள் நிறுத்தப்பட்டிருப்பதை உறுதிபடுத்தினார். தரைவழித் தாக்குதல் தொடங்கியது முதலே காஸாவில் இதுவரை இல்லாத அளவிலான தொடர் குண்டு வீச்சுகள் நிகழ்ந்து வருகின்றன.

இஸ்ரேலின் தரைவழிப் படைகள், காஸாவில் நுழைந்ததை 'தீய சக்தியின் கோட்டைக்குள்' படைகள் நுழைந்துள்ளன என்று நெதன்யாகு குறிப்பிட்டார்.

ஹமாஸ் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டவர்களின் குடும்பங்களை நேரில் சந்தித்து நெதன்யாகு ஆறுதல் கூறினார். அப்போது அந்தக் குடும்பத்தினர், தரைவழித் தாக்குதல் தொடங்கி, தீவிரப்படுத்தப்பட்டிருப்பதால் தங்கள் உறவினர்களுக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சத்தை அவரிடம் வெளிப்படுத்தினர்.

அவர்களிடம் பேசிய நெதன்யாகு, பணயக் கைதிகளை பத்திரமாக மீட்டுக் கொண்டு வருவது இந்தப் போரில் ராணுவத்தின் நோக்கங்களில் முக்கியமான ஒன்று என்றார்.

**அழிவுக் காடாக மாறிய காஸா நகரம்**

காஸா நகரில் இஸ்ரேலின் எச்சரிக்கை அறிவிப்புகளைக் கொண்ட பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதில் அந்தப் பகுதி தற்போது 'போர்க்களமாக' மாறியுள்ளது என்றும், அந்தப் பகுதியில் மக்கள் யாரேனும் இருந்தால் அவர்கள் தெற்குப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வான்வழித் தாக்குதல் மூலம் பெரும்பாலும் தீவிரவாதிகளின் கட்டமைப்பும் பூமிக்கு அடியில் உள்ள இலக்குகளையும் தான் குறி வைத்து தகர்க்கிறோம் என இஸ்ரேல் கூறியிருந்தது. தற்போது தரைப் படையினர் வெள்ளிக்கிழமை மாலை முதல் தங்களது தாக்குதலை விரிவுபடுத்தியுள்ளனர். ராணுவத்தின் இலக்கை





அடைய அனைத்து வகைகளிலும் தீவிரமாகச் செயல்படுகிறோம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தரைவழித் தாக்குதல் தொடங்கியது முதல் காஸாவில் உள்ள மக்கள் வெளியுலகத் தொடர்பு இல்லாமல் இருக்கின்றனர். அந்தப் பகுதியில் தொலைபேசி இணைப்புகள் மற்றும் இணையதள சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்த தரைவழி தாக்குதலை துருக்கியின் அதிபர் ரெசப் தய்யிப் எர்டோகன் கண்டித்துள்ளார். இஸ்ரேல் போர் குற்றங்களை நிகழ்த்துவதாக அவர் கூறியிருந்தார்.

இதனால் கோபமடைந்த இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு, இஸ்ரேலில் உள்ள துருக்கி தூதர்களையும் அதிகாரிகளையும் வெளியே அனுப்பினார். இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளை, "தார்மீக ராணுவம்" என்று அவர் குறிப்பிட்டார்.

**இஸ்ரேலின் தாக்குதல் அதிர்ச்சியளிக்கிறது: ஐ.நா. பொதுச் செயலாளர்**

அக்டோபர் 7ஆம் தேதி ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலில் சுமார் 1,500 இறந்துள்ளனர். 200க்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் காஸா மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதலில் காஸாவில் இதுவரை 8000 பேர் இறந்துள்ளதாக காஸா சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்தப் போரில் மனிதநேய காரணிகளைக் கருத்தில் கொண்டு போர் நிறுத்தம் கொண்டு வரவேண்டும் என உலக சமூகம் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், போரின் அடுத்த கட்டத்துக்கு இஸ்ரேல் சென்றிருப்பது அதிர்ச்சியாக இருப்பதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

பொதுவாக போர் போன்ற சூழல்களில் வெளிப்படையாக கருத்து தெரிவிக்காத சர்வதேச செஞ்சிலுவை சங்கம், இந்தப் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் காஸாவில் பொறுத்துக் கொள்ள முடியாத அளவிலான துயரம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை இரவு வெளியிட்ட தனது அறிக்கையில், "இருபது லட்சம் மக்கள் குண்டு வீச்சுகள் மற்றும் ராணுவ முற்றுகைக்கு இடையில், வெளியே செல்ல முடியாமல் காஸாவில் சிக்கியுள்ளனர். இந்தப் பேரழிவை உலகம் பொறுத்துக் கொள்ளக்கூடாது," என்று தெரிவித்தது.

ஞாயிற்றுகிழமை எக்ஸ் சமூக ஊடக தளத்தில் பதிவிட்ட இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள், காஸாவுக்கான மனிதநேய உதவிகள் அமெரிக்கா மற்றும் எகிப்திடம் இருந்து விரிவுப்படுத்தப்படும் எனத் தெரிவித்தது.

ஆனால் இந்த உதவிகள் எப்போது எங்கு எப்படி வழங்கப்படும் என்பது குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. மேலும் இஸ்ரேலுக்கு மக்கள் வாழும் பகுதி எது, ஹமாஸின் பகுதி எது எனத் தெரியும் என்பதால், மக்கள் வாழும் பகுதியில் மறைந்துகொண்டு, ஹமாஸ் மனித கேடயங்களைப் பயன்படுத்தி தாக்குதலில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றம் சாட்டியது.

காஸா மீதான தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவான போராட்டங்கள் உலகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன. இஸ்தான்புல்லில் நடைபெற்ற பாலஸ்தீனத்துக்கு ஆதரவான மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் துருக்கியின் அதிபர் ரெசப் தய்யிப் எர்டோகன் பங்கேற்றார். அப்போது அவர், இஸ்ரேலை ஆக்கிரமிப்பாளர் என்றும் இந்த வன்முறைக்கு மேற்கு நாடுகள் பொறுப்பு என்றும் கூறினார்.

பிரிட்டன் தலைநகரான லண்டனில் நீண்ட பாலஸ்தீன கொடி ஒன்றை ஏந்தி ஆயிரக்கணக்கானோர் போராட்டம் நடத்தினர். மலேசிய தலைநகரான குவாலா லம்பூரில் அமெரிக்க தூதரகம் வெளியே நூற்றுக்கணக்கானோர் பாலஸ்தீன கொடிகளுடன் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். அதே போன்று மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள பெர்த் நகரிலும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளை உடனே விடுவிக்குமாறு மேற்கு கரையில் மக்கள் போராட்டம் நடத்தினர்.

## களுதாவளை மாணவன் சாதனை



மட்டக்களப்பு, ஒக். 30

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம்,பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட களுதாவளை தேசிய பாடசாலை மாணவன் கே.பகீர்ஜன் 14 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 1.69 மீற்றர் பாய்ந்து சாதனையை ஏற்படுத்தியுள்ளதுடன் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டார்.

கொழும்பு சுகதாச விளையாட்டரங்கில் இடம் பெற்ற நிகழ்வின் போதே இச் சாதனை நிலைநாட்டப்பட்டது.

பாடசாலை அதிபர் கணபதிப்பிள்ளை சத்தியமோகன் உள்ளிட்ட கல்வி சமூகம் இம்மாணவனுக்கும் பயிற்சி

வழங்கிய உடற்கல்வித் துறை ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். (அ)

## காக்காச்சிவட்டை விஷ்ணு ம.வியில் பயிரிடப்பட்டிருந்த மரக்கறி அறுவடை



மட்டக்களப்பு, ஒக். 30

“பயிர் வளர்போம் பயன் பெறுவோம்” எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட காக்காச்சி வட்டை விஷ்ணு மகா வித்தியாலய அதிபர் பன்னீர்ச்செல்வம் சுகிதரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் பாடசாலை வளாகத்தில் பயிரிடப்பட்டிருந்த பாடசாலை தோட்ட மரக்கறி பயிர்களின் அறுவடை கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள் புத்தகக்கல்வியில் கவனம் செலுத்தும் அதேவேளை, ஓய்வு நேரங்களில் பொருளாதார ரீதியில் தம்மையும் குடும்பத்தையும் வளப்படுத்திக் கொள்ள புறக்கிருத்திய செயற்பாடாக பாடசாலை காலங்களிலே ஆசிரியர்களினால் சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்பட வேண்டும். அதனடிப்படையில், பாடசாலை தோட்டத்தில் பயிரிடப்பட்ட மரக்கறிகள் அறுவடையில் அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றமை விசேட அம்சமாகும். (அ)

## சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் பாடசாலைக்கு ஒரு தொகுதி வர்ணப்பூச்சு பெட்டிகள் அன்பளிப்பு

அம்பாறை, ஒக். 30

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலை கல்வி சமூகத்தின் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளை தொடர்ந்து ஒரு தொகுதி வர்ணப் பூச்சுப் பெட்டிகளை றிஸ்லி முஸ்தபா கல்வி உதவி சமூக சேவை அமைப்பு பாடசாலை அதிபர் நஸ்லின் றிப்கா அன்சாரிடம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியது.

வகுப்பறைகளில் பிள்ளை நேய கற்றல் சூழலினை உருவாக்கும் நோக்கத்துடன் இவ்வுதவியினை இப் பாடசாலை மாணவர்களின் நலன்களுக்காக வழங்கியுள்ளமையானது மிகவும் பாராட்டத்தக்கது. (அ)



# சீனா - பூடான் நெருக்கத்தால் எல்லையில்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் கூறுகையில், பூடான் சீனாவோடு மட்டும் உறவு வைத்துக்கொண்டால் நிச்சயம் அதை அமெரிக்க ஏற்றுக்கொள்ளாது. பூடானோடு வெளியுறவு சிக்கல்களையும் அமெரிக்கா உருவாக்கும் எனத் தெரிவித்தார்.

பூடான் மீது சீனா அழுத்தம் கொடுக்கிறதா என்பதையும் பார்க்கவேண்டும். ஏனென்றால் தங்களோடு தூதரக உறவு வைத்துக்கொண்டால் அதற்கு பதிலாக எல்லைப் பிரச்சனையை தீர்த்துக்கொள்ளலாம் என சீனா பூடானிடம் கூறுவதாக பேராசிரியர் பந்த் கூறுகிறார்.

அவர் கூறுகையில், “இந்த விஷயத்தில் இந்தியா கண்டிப்பாக பூடானோடு பேசும். பூடானும் சீனாவுடன் தாங்கள் என்ன செய்கிறோம், செய்யவில்லை என்பதை இந்தியாவிற்கு தெரிவிக்கும்” எனத் தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து மேஜர் ஜெனரல் அஸ்தானா கூறுகையில், “பூடான் இறையாண்மையும் ஜனநாயகமும் கொண்ட நாடு. அவர்கள் எந்த நாட்டுடனும் இருதரப்பு உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்வார்களா என்பதுதான் கேள்வி” எனத் தெரிவித்தார்.

பூடானின் பிரதமர் லோடேய் ஷெரிங்கின் அறிக்கையை குறிப்பிடும் அஸ்தானா, “கோட்பாட்டு அளவில் பூடான் சீனாவோடு எப்படி எந்த இருநாட்டு உறவும் வைத்துக் கொள்ளாமல் இருக்க முடியும். எப்போது மற்றும் எந்த விதத்தில் அந்த உறவை வைத்துக் கொள்ள போகிறோம் என்பதுதான் கேள்வி” என தெரிவித்தார்.

பூடானில் மன்னராட்சி இருந்தபோது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் ஏதேனும் ஒருவருடன் பூடான் இருதரப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டால், மீதமுள்ள நான்கு நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பூடான் இருந்ததாக கூறப்படுகிறது. ஆனால் பூடானில் ஜனநாயகம் வந்த பிறகு, பூடானின் அந்த நிலைப்பாட்டில் மாற்றம் வந்திருக்கலாம். ●

